பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 06 சனிக்கிழமை 22 .07.2023 கதிர் 253

# தமிழரின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும்

## இந்தியாவின் எதிர்ப்பார்ப்பு அதுவே ரணிலிடம் மோடி வலியுறுத்து
## 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி தேர்தலை நடத்தவும் அழுத்தம்

**இலங்கையில் தமிழர்களின் மரியாதை மற்றும் கண்ணியத்தை உறுதிப்படுத்தும் வகையில் அவர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதே இந்தியாவின் எதிர்ப்பார்ப்பு என்று இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. தனது இரண்டு நாள் இந்தியப் பயணத்தில் நேற்று இந்தியப் பிரதமரைச் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அவர் இதனை நேரில் வலியுறுத்தியுள்ளார்.**

**இந்த விடயத்தின் ஒரு பகுதியாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் தேவை தொடர்பிலும் இரு தரப்புப் பேச்சுக்களின்போது முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.**

**இந்தியப் பிரதமருடனான தனது சந்திப்பின்போது, வடக்கு மாகாண அபிவிருத்தி, அதிகாரப் பரவலாக்கம் (டிவலூஷன்) ஊடான அதிகாரப்பகிர்வு (பவர்ஷெயாரிங்), நல்லிணக்கத்தை முன்னகர்த்தல் ஆகியன தொடர்பாக இந்த வாரம் தான் முன்வைத்த விரிவான முன்மொழிவுகளை இந்தியப்** ☞2

## இது ரகசியம் அல்ல!

இந்தியா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதியின் பயணத்தில் தமிழர்களாகிய நாங்கள் எமது அரசியல் பிரச்சினைக்கான தீர்வு குறித்தே அதிகளவில் கரிசனை கொண்டிருந்தாலும் இரு நாடுகளுக்கும் அதற்கும் அப்பால் கரிசனைக்குரிய பல விடயங்கள் உள்ளன.

இந்தத் தடவை நடந்த பேச்சுக்களில் இலங்கையைப் பொறுத்தவரையில் முக்கியத்துவமானது அதன் பொருளாதார நலன்களுக்கான நகர்வுகள். இந்தியாவைப் பொறுத்தவரை முக்கியத்துவம் மிக்கதாக இருந்தது இலங்கைக்குள் சீனாவின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பான நகர்வுகள்.

இந்தியப் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் இந்த இரு விவகாரங்களே மிக முக்கியமாக ஆராயப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இலங்கையில் சீனாவின் வகிபாகம் மற்றும் நடவடிக்கைகள் அதற்கு கொழும்பு அளித்துவரும் இடம் குறித்த தனது பாதுகாப்புக் கவலைகளை இந்தியத் தரப்பு அழுத்தமாக முன்வைத்துள்ளது.

இந்தியப் பாதுகாப்புக்கு மட்டுமல்ல இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பின் மீதும் தனக்கு இருக்கும் பொறுப்பின் அடிப்படையில் இலங்கையில் சீனாவின் வகிபாகத்தைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் ☞2

## வாங்க எவருமில்லை

பாரிய நட்டத்தில் இயங்கி வரும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தைத் தனியார்மயப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ள போதிலும் அதை வாங்குவதற்கு எவரும் முன்வரவில்லை என்று அறியமுடிகின்றது.

இதன் 49 வீத பங்குகளை அரசு வைத்துக்கொண்டு 51 வீத பங்குகளைத் தனியார் நிறுவனத்திடம் வழங்கும் திட்டம் உள்ளது.

ஆனால், அதை வாங்குவதற்கு எந்த வொரு நிறுவனமும் இதுவரை முன்வரவில்லை. (02)

## மோடி சொல்லியனுப்பிய செய்தியை ரணில் நடைமுறைப்படுத்தவேண்டும்

### மனோ எம்.பி. வலியுறுத்து

'மாகாணசபைத்தேர்தல், மலையக மக்களுக்கான ஒதுக்கீடு இரண்டும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சொல்லியனுப்பியுள்ள செய்தி' - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்தியத் தலைவர்கள் சந்திப்பு மற்றும் இந்தியப் பிரதமரின் அறிவிப்புகள் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

'சமத்துவம், நீதி, அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல், இந்தியவம்சாவளி மலையகத் தமிழருக்கு இந்திய ரூபா 75 கோடி ஒதுக்கீடு ஆகியவை இந்தியப் பயணத்தில் பிரதமர் மோடி, எமது ஜனாதிபதிக்குச் சொல்லி அனுப்பிய செய்தி. இவை இரண்டையும் வெறும் கட்சி அரசியல், இனவாத அரசியல் ☞2

# அடுத்த கால்நூற்றாண்டுக்கான இந்திய உறவுகளுக்கு அடித்தளம்

## தனது பயணம் குறித்து ரணில் இப்படி விவரிப்பு

இந்தியாவிற்கு இருநாள் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் மோடியுடன் தான் இன்று நடத்திய கலந்துரையாடல் இலங்கை - இந்தியாவின் அடுத்த 25 வருடங்களுக்கான அடித்தளத்தை இடும் என்று தெரிவித்தார்.

தனது இந்தியப்பயணம் குறித்து இந்திய ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் புதுடில்லிக்கு வருவதை கௌரவமாகக் கருதுகின்றேன். கடந்த ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் நான் இந்தியாவுக்கு முதல் முறையாக வருகை தந்திருக்கும் நிலையில், இந்தப் பயணம் எனக்கும், எனது அரசுக்கும் மிக முக்கியமான பயணம் என்றேகூறவேண்டும். இந்தப் பயணத்தின் போது எனக்கும், எனது குழுவினருக்கும் உபசரிப்புக்களை வழங்கிய பிரதமர் மோடிக்கும், இந்திய அரசுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைபட்டுள்ளோம்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் மேம்படுத்தப்பட்ட பொருளாதார, உள்கட்டமைப்பு, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பாராட்டத்தக்கவை. இந்தியாவின் வளர்ச்சி அயல் நாடுகள் மற்றும் இந்து சமுத்திர வலய நாடுகளுக்கு சாதகமான தன்மையை ஏற்படுத்தும்.

கடந்த வருடம் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார, சமூக, அரசியல் ரீதியிலான அசாதாரண சவால்கள் மற்றும் அந்தச் சவாலைகளை வெற்றிகொள்வதற்காக தன்னால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்பிலும் பிரதமர் நரேந்திர மோடியிடம் எடுத்துரைத்திருந்தேன்.

எமது அண்மைய வரலாற்றில் மிகசவாலான காலப் பகுதியில் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு பிரதமர் மோடி அவர்களுக்கும், இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கும் மனப் ☞2

## வீதி விபத்தில் இளைஞர் சாவு



வவுனியா, மன்னார் வீதயில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார் என்று நெளுக்குளம் பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா, மன்னார் வீதி, 4ம் கட்டைப் பகுதியில் வியாழன் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் சஜந்தன் (வயது 32) உயிரிழந்தார்.

வவுனியாவில் இருந்து மன்னார் வீதி வழியாக பயணித்துக் கொண்டிருந்த போது கட்டைப் பகுதியில் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கில் வீதியோரத்தில் இருந்த மின் கம்பத்துடன் மோதி இருக்கலாம் என்று பொலிஸார் கருதுகின்றனர்.

தூக்க கலக்கத்தில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்திருக்கக்கூடும் என்றும் கருதப்படுகின்றது. .

சம்பவத்தில் வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்தவரான சஜந்தன், வவுனியா ☞2

## கைதான இந்திய மீனவர்களுக்கு 18 மாதங்கள் ஒத்திவைப்பு சிறை

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 15 இந்தியக் கடற்றொழிலாளருக்கு, 18 மாத சிறைத்தண்டனை விதித்த ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்று, அதனை 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டபோது, ஜூலை 9 இந்த இந்திய கடற்றொழிலாளர்கள் 15 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் அன்றைய தினமே நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர், ☞2

## நெடுங்கேணியில் நேற்று விவசாயி சுட்டுக்கொலை

வவுனியா, நெடுங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிக்குடியிருப்பு கிராமத்தில் நேற்று ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அழகையா மகேஸ்வரன் (வயது 58) என்பவர் அவரது அயல் தோட்டக்காரரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

விவசாயியான அவர், தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது, பக்கத்து தோட்டத்தில் நின்ற ஒருவர் கல்லால் எறிந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மகேஸ்வரன், மண்வெட்டியுடன் அவரை விரட்டிச் சென்றுள்ளார். ☞2

## மனநோயாளியைப் போல் செயற்படும் சரத் வீரசேகரவை வெளியேற்றுங்கள்

### செல்வம் எம்.பி. வலியுறுத்து

'தமிழர்களுக்கு 13ஐ வழங்க வேண்டாம், சமஷ்டியை வழங்க வேண்டாம் எனக் கூறிக்கொண்டு மனநோயாளி போல் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர செயற்பட்டுவருகின்றார். எனவே, தமிழ் மக்களை சீண்டவேண்டாம் என அவரை எச்சரித்துக்கொள்கின்றேன்.'

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மனநோயாளி போல் செயற்படும் சரத் வீரசேகரவை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று (21) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றுள்ளார். அவர் எங்களை அழைத்துப் பேச்சு நடத்தியபோது 13 ☞2

## வடக்கில் சிறுவர் பெண்களின் பாதுகாப்பு குறித்து ஆளுநர் தலைமையில் ஆராய்வு

வட மாகாணத்தில் சிறுவர், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக, வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸின் தலைமையில் விசேட கலந்துரையாடல் நிகழ்வொன்று ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாகாண மகளிர் விவகார அமைச்சின் அதிகாரிகள் சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்ட மட்டத்தில் உள்ள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசப்பட்டது.

குறிப்பாக போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், கைத்தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மீதான அதீத நாட்டம், இளவயது திருமணம், சிறுவர் பராமரிப்பின்மை, சிறுவர் இல்லங்களின் குறைபாடுகள், பாடசாலை இடைவிலகல், பெற்றோரின் முறையற்ற திருமணங்கள் முதலிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேசப்பட்டன.

இந்நிலையில் மேற்படி பிரச்சினைகளின் மூலகாரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வுகாணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு தினமும் ஒரு பாடம் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், கிராம மட்டத்தில் விளையாட்டு, கலைச்செயற்பாடுகள் ☞2

## ஓகஸ்ட் 21 நல்லூர் கொடியேற்றம் ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்வு



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா ஓகஸ்ட் 21 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதனுடைய ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக யாழ் மாநகர சபையினால் விளக்க ☞2

## தும்புத் தொழிற்சாலையின் ஒரு பகுதி தீயில் கருகி நாசம்

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஈரப்பெரியகுளம் தும்புத் தொழிற்சாலையில் நேற்றுத் திடீர் தீவிபத்து ஏற்பட்டு தொழிற்சாலையின் ஒரு பகுதி கருகி நாசமாகியது.

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலையில் மாலை 5.45 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்ததை அவதானித்த அங்கு கடமையில் இருந்தவர்கள் உடனடியாக பொலிசாருக்கும், வவுனியா மாநகரசபை தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா மாநகரசபை தீயணைப்பு பிரிவினர் இராணுவத்தினரின் துணையுடன் தீயைக் கட்டுப்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் தும்புத் தொழிற்சாலையின் இரு பகுதிகளில் தீ பரவியிருந்தது. இரவு வரை தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் தொடரந்து இடம்பெற்றன.

தீ விபத்துக்கான காரணம் குறித்து ஈரப்பெரியகுளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(100)

## இனி இது .....

குறித்து இலங்கைத் தரப்புக்கு விளக்கப்பட்டுள்ளது. சில பல விடயங்கள் ஆணித்தரமாக விளக்கப்பட்டுள்ளது.

சீன உளவுக் கப்பலுக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் இடமளித்தது மற்றும் சீன அயலுறவுத்துறை அமைச்சர் தலைமையில் முதலீட்டாளர்கள் என்ற பெயரில் வந்த பெருமளவு சீனர்களின் நோக்கம் என்பன குறித்த தனது சந்தேகங்கள், கவலைகள், கரிசனைகளை இந்தியா விரிவாக எடுத்து விளக்கியுள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்ற நடவடிக்கைகள் அனுமதிக்கப்படக்கூடாது என்கிற இந்தியாவின் எதிர்பார்ப்பும் நாசூக்காக அன்றி அழுத்தமாகவே சொல்லப்பட்டுமுள்ளது. இந்தியாவின் இந்தக் கரிசனைகளையெல்லாம் தலையாட்டி ஏற்றுக்கொண்ட இலங்கைத் தரப்பு, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு நடவடிக்கையிலும் இலங்கை ஈடுபடாது என்கிற உறுதிமொழியைத் திரும்பத் திரும்ப வழங்கியது. இந்துமாகடலில் இந்தியாவின் நலன்களுக்கு எதிராக இலங்கை ஒருபோதும் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளாது என்கிற ஆத்மார்த்தமான உறுதிமொழிகளை வழங்கி அதனைத் திருப்திப்படுத்துவதிலும் நம்பவைப்பதிலும் இலங்கைத் தரப்பு அதிக கவனமும் கரிசனையயும் எடுத்துக்கொண்டது.

பதிலுக்கு பொருளாதாரச் சரிவிலிருந்து வேகமாக மீண்டு வருவதற்கான வழிவகைகள் குறித்து இலங்கைத் தரப்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார மீட்சிக்கு மட்டுமன்றி, எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கும் இந்தியாவின் பங்கை அதிகளவில் பெறுவதில் இலங்கைத் தரப்புக் குறியாக இருந்தது. இந்தியாவின் பாதுகாப்புக் கவலைகளை நிவர்த்தி செய்வதற்காக எதையும் செய்வதற்குத் தயாராக இருப்பதாகக் காட்டிக்கொள்வதன் மூலம் தனது பொருளாதார நலன்களைப் பெறுவதில் இலங்கைத் தரப்பு மும்முரமாக இருந்தது.

இந்த இரண்டுக்கும் நடுவில் ஒரு ஓரமாக தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பான கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. இது விடயத்தில் இந்தியாவின் அழுத்தங்களை வழக்கம்போலவே இந்தத் தடவையும் இலங்கை வெகு சாமர்த்தியமாகச் சமாளித்தது. அதிகாரப் பரவலாக்கம் மூலமாக அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வது என்கிற இதுவரையில்லாத புதிய கோட்பாடு மூலமாக புதுப் புது அர்த்தங்களைக் கற்பித்துவிட்டு நழுவிக் கொண்டார் ரணில். அவருக்கு நன்றாகவே தெரியும், இந்தியப் பாதுகாப்பு நலன்களுக்கு முன்பாகத் தமிழர்கள் சிறு கொசுக்கள் மட்டுமே என்பது. எனவே அவர் கொழும்பு திரும்பியதும் தமிழர் விவகாரம் தொடர்பில் அங்கு பேசப்பட்ட விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கமாட்டார் என்று உறுதியாக நம்பலாம். அதற்குப் பதிலாக இந்தியாவின் நம்பிக்கையைப் பெறும் வகையில் அதன் பாதுகாப்புக் கரிசனைகளுக்குப் பழுது வராமல் அவர் பார்த்துக் கொள்வார்.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மோடியிடம் தான் விளக்கினார் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இரு தரப்புச் சந்திப்புக்களின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் மீள்கட்டமைப்பு, நல்லிணக்கம் தொடர்பாகவும் நாம் பேசினோம், இவை தொடர்பில் தன்னுடைய அணுகுமுறையை ரணில் விக்கிரமசிங்க எனக்கு எடுத்துரைத்தார் என்று இந்தியப் பிரதமரும் அந்த இணைந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இலங்கை "தமிழர்களின் அபிலாஷைகளை இலங்கை அரசு நிறைவேற்றும் என நம்புகிறோம்; சமத்துவம், நீதி மற்றும் அமைதி ஆகியவற்றை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று நம்புகின்றோம்; அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்துதும் தனது அர்ப்பணிப்பை நிறைவேற்றும் என்று நம்புகின்றோம்" என்றார் இந்தியப் பிரதமர் மோடி.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களுக்காக 75 கோடி இந்திய ரூபாய் பெறுமதியான திட்டங்கள் குறித்தும் பிரதமர் மோடி அறிவித்தார். இந்திய வசம்சாவழித் தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடையும் இந்தத் தருணத்தில் அவர்களுக்காக 75 கோடி ரூபாய் பெறுமதியான பல திட்டங்களை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என்றார் அவர்.

மேலும் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளின் அபிவிருத்திக்காகவும் இந்தியா பங்களிக்கும் என்றும் அவர் அறிவித்தார்.

''நல்லிணக்கம், அதிகாரப் பரவலாக்கம் ஊடாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் வடக்கு அபிவிருத்தித் திட்டம் என்பவற்றை முன்னெடுப்பதற்காக இந்தவாரம் நான் முன்வைத்த விரிவான முன்மொழிவுகளை இந்தியப் பிரதமருடன் பகிர்ந்துகொண்டேன்.

இந்த விடயங்களில் ஒருமித்த கருத்து மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை நோக்கிப் பணியாற்ற வருமாறு நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். அதன் பின்னர் அதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் நாம் முன்வைப்போம்'' என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.

## மோடி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற் றுக்கு அப்பால், நாட்டின் அரசியல் சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாகப் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்த வேண்டும். இவற்றைப் பாரத பிரதமர் நரேந்திர மோடி நேரடியாகக் கண்காணிக்க வேண்டும்.

இவை எதுவும் இலங்கையில் வாழும் ஈழத்தமிழருக்கும், மலையகத் தமிழருக்கும் முழுமையான தீர்வுகளைத் தந்து விடப் போவதில்லை. ஆனால், இவற்றைச் செய்தாவது இலங்கை அரசு தனது நேர்மையை பறைசாற்ற வேண்டும்.

இந்திய அரசுக்கு நன்றி. இலங்கையில் துன்புற்று வாழும் தமிழ் மக்கள் தொடர்பில் இந்திய அரசுக்கு எப்போதும் தார்மீகக் கடப்பாடு உண்டு.

1964 இன் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், 1987 இன் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படையில் சட்டப் பொறுப்பும் உண்டு. அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதைத்தான் நாம் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம். புதிதாக ஒன்றும் சொல்லவில்லை.' - என்றுள்ளது. (02)

## வீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சார சபையில் கடமையாற்றி வந்தார். விபத்து தொடர்பில் நெளுக்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

100

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவற்றில் இளையோரை அதிகளவில் ஈடுபடுத்தும் வகையில், பிரதேச செயலகங்களின் துறைசார் அலுவலர்கள், விளையாட்டுக் கழகங்கள், மகளிர் அமைப்புக்கள், கலைக்குழுக்கள் என்பனவற்றையும் இணைத்துச் செயற்பாடுகளை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குப் பணிப்புரை வழங்கினார். (05)

## ஓகஸ்ட் 21....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மளிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயவருடாந்தமஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

யாழ் மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு தீர்மானங்கள் எட்டப்பட்டன. அவையாவன.

ஓகஸ்ட் 20 காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு செப்டம்பர் 16ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னர் நள்ளிரவே திறந்துவிடப்படும்.

ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாது. அதே போல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவுசெய்ய முடியாது. காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

ஆலயத்துக்கு நேர்த்திக் கடன்களைக் கழிப்பதற்காக வருகின்ற தூக்குகாவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள் நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ் மாநகர சபை அலுவலகம் முன்பாக உள்ள நல்லூர் குறுக்கு வீதியால் பயணித்து யாழ் நகரை அடைய முடியும். ஆனால் இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும் - என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் கந்தசுவாமி ஆலய பிரதிநிதிகள், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரது பிரதிநிதி, யாழ் மாநகர சபை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை நேற்றுவரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு இன்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 15 பேரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அதன்போது 15 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை விதித்து ஊர்காவற்துறை நீதிவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட படகு உரிமை கோரிக்கை வழக்கு விசாரணையை ஓகஸ்ட் 4 ஒத்திவைத்தார்.

## நெடுங்கேணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பியோடியவர் பக்கத்திலுள்ள தனது வீட்டுக்குச் சென்று, அங்கிருந்த இடியன் துப்பாக்கியை எடுத்து வந்து சுட்டதில் மகேஸ்வரன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (02)

## மனநோயாளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல் பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாது என்ற தொனியில் பேசினார். சமஷ்டி முறையிலான தீர்வே எமது விருப்பமாகும்.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள ஒரு விடயம். எனவே, அரசமைப்பை மீறுவதற்கு ஜனாதிபதிக்குக் கூட அருகதை இல்லை. ஆனால் ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் அரசமைப்பை மீறும் பாதகச் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தீர்வை வழங்குவார்களா என்ற ஐயப்பாடு எம்முள் உள்ளது.

போர்க்காலத்தில் சமையல் அறையில் இருந்த சரத் வீரசேகர, தற்போது மனநோயாளி போல் செயற்பட்டு வருகின்றார். குருந்தூர்மலை விவகாரத்திலும் மூக்கை நுழைக்கின்றார். சரத் வீரசேகர என்பவர் யார்? அவரை இயக்குவது யார்? அமெரிக்கத் தூதுவர், கனேடிய தூதுவர் எல்லாம் நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என அவர் வலியுறுத்துகின்றார். இந்தியாவையும் சாடுகின்றார். அந்த மனநோயாளியைச் சபையில் இருந்து வெளியேற்ற வேண்டும்.'- என்றார். (02)

## அடுத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமாக நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கையின் அண்மைக்கால நிலைமைகளை மீளாய்வுச் செய்யும் போது, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வாழும் இலங்கையர்களின் அனைத்து சமூகங்களுக்கும் பலன் கிட்டும் வகையில், நீதி, நியாயத்துடனான நிலையான, ஸ்திரமான அபிவிருத்தியை நோக்கிய பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான எனது அர்ப்பணிப்புக்களை பிரதமர் மோடிக்கு எடுத்துரைத்துள்ளேன்.

இதற்கு அப்பால் சென்று இலங்கையை பாரிய பொருளாதார மறுசீரமைப்பு பாதைக்கு இட்டுச்சென்றுள்ளதையும், இந்த செயற்பாடுகளின் நிலையான பிரதிபலன்களை இலங்கை தற்போது அடைந்துள்ளதாகவும், நாட்டின் முன்னேற்றம் குறித்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நம்பிக்கை மீள கட்டியெழுப்பப்பட்டுள்ளதையும் நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

மறுசீரமைப்பு, அதிகாரப் பகிர்வு, அதிகாரப்பரவலாக்கம், வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பலதரப்பட்ட விடயங்களை தொடர்ந்தும் முன்னேடுத்துச் செல்வதற்காக நான் முன்வைத்த பரந்து பட்ட யோசனை குறித்து கருத்துக்களையும் நான் அவருடன் பகிர்ந்துகொண்டேன். இந்த பணிகள் குறித்து இணக்கப்பாட்டுடன், தேசிய ஒற்றுமைக்காக பணியாற்றுமாறு நான் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். இந்த முயற்சிகளுக்குப், பிரதமர் மோடி தனது ஒத்துழைப்பையும், ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளார்.

நாம் தற்போது எமது பொருளாதாரத்தை, நாட்டிற்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரும் வகையிலும், நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் மேம்படுத்தப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குவதற்கும் அவசியமான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும்.

இந்த நோக்கத்தை வெற்றிகொள்வதற்காக, பலமான பங்களிப்பை அடித்தளமாகக் கொண்டு மேம்படுத்தப்பட்ட தொடர்புகள் ஊடாக எதிர்கால இலங்கை - இந்திய பொருளாதார கூட்டிணைவுக்காக ஒருங்கிணைந்த நோக்கத்திற்காக ஒன்றுபட வேண்டும்.

எமது இருதரப்பு இராஜதந்திர தொடர்புகளில் 75ஆவது வருடத்தைப் பூர்த்திசெய்யும்போது, அடுத்த சில தசாப்தங்களில் எமது எதிர்கால சந்ததியினருக்காக வழங்கக்கூடிய வாய்ப்புகள் மற்றும் மேலதிக வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான உள்ளக செயற்பாடுகள் ஊடாக மிகவும் பாதுகப்பான எதிர்காலத்தை நோக்கி செல்வதற்கான இயலுமை பற்றியும் ஆராய்தோம்.

இரு நாடுகளுக்கும் இடையில், பல தசாப்தங்கள் பழமையான நாகரிகம், கலாசார, மானிட மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் போதான உள்ளகச் செயற்பாடுகள், வாயிலாக எமது ஒன்றிணைந்த நோக்குக்கான அடித்தளம் உருவாகியுள்ளது.

எமது உறவுகள் என்ற நூல் வரலாற்றிலிருந்தே பிரித்தெடுக்கப்பட்டுள்ளது. எமது எதிர்கால இலக்குகளுக்கான ஆரம்பத்திற்கு நிகழ்காலமே மிகச் சிறந்த தருணமாகும்.

பொருளாதாரப் பங்காளித்துவத்தின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில் நவீன இணைப்பு முக்கியப் பங்காற்றுகிறது. அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட சென்னை மற்றும் யாழ்ப்பாண விமானச் சேவைகள், இரு நாடுகளுக்கும் இடையிலான விமான இணைப்பில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். இரு நாடுகளுக்குமிடையில் விமான சேவைகளையும், கப்பல்சேவைகளைகளையும் மேம்படுத்த உடன்பாடுகாணப் படுகிறது. அது சுற்றுலா மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்தும்.

தலைமன்னார்-ராமேஸ்வரம் மற்றும் நாகபட்டினம் - காங்கேசன்துறை ஆகிய பகுதிளுக்கிடையிலான படகு சேவை இரு நாடுகளுக்கான கடல்வழிப்போக்குவரத்துக்கு வலு சேர்க்கும். இலங்கை மற்றும் இந்திய உறவுகளுக்கான வேறு வழிமுறைமைகள் தொடர்பில் ஆராய்வதும் பொருளதார வளர்ச்சிக்கு மற்றுமொரு வலுவாக அமையும்.

புதிய மற்றும் முன்னுரிமை வழங்க வேண்டிய துறைகளுக்கு இருதரப்பு பொருளாதாரம் மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்காக இலங்கை மற்றும் - இந்தியா பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை மிகவும் முக்கியமானது என்ற விடயத்திற்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம். டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக சேவைவழங்கல் மற்றும் தனிநபர்களை மையப்படுத்திய சேவைகளுக்கான இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள இலங்கை ஆர்வமாக உள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் மேம்படுத்தப்படும் தொடர்பாடல், சுற்றுலாத்துறை, மனிதர்களுக்கிடையிலான பரிமாற்றங்கள் மற்றும் கலாசார தொடர்பாடல்கள் உள்ளிட்ட துறைகளை வலுவூட்டுவதற்கான முக்கியமான விடயங்களுக்கு நாம் இணங்கியுள்ளோம். தொற்று நோய் பரவலுக்கு பின்னராக காலப்பகுதியில், இலங்கையின் சுற்றுலாத் துறை தனது வருமானத்தை மேம்படுத்திக்கொள்ளும் நோக்குடன் இருக்கின்ற நிலையில், இந்தியர்களின் இலங்கைக்கான சுற்றுலா மிகப்பெரிய சந்தையாக மாறியுள்ளது. அதனால், Unified Payments Interface (UPI) முறைமையை அடிப்படையாக கொண்ட டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் முறைமையை வலுவூட்டுவதால், ஏனைய துறைகளையும் பலப்படுத்த முடியும்.

பசுமை பொருளாதாரத்திற்கு இலங்கையின் தேசிய முக்கியத்துவம் உலக அர்பணிப்புக்களுக்கு இணங்க வலுசக்தி பாதுகாப்பை உறுதிபடுத்துவதற்காகவும், பசுமை மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுவூட்டலுக்கான இந்தியாவுடன் கைகோர்த்துக்கொள்வது பெறுமதியான வாய்ப்பு என இலங்கை கருதுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கான துறைசார் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பிலும் வலியுறுத்துகிறேன். இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான அதிக வலுவுடனான மின் பரிமாற்ற தொடர்புகட்டமைப்பு ஒன்றை நிறுவினால் இருநாடுகளுக்கும் இடையிலான இருவழிப்பாதை மின் வர்த்தகத்திற்கான வழியை ஏற்படுத்தும்.

இந்தியாவின் ஒத்துழைப்போடு, திருகோணமலை இலங்கையின் வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பிலான மையமாகவும் திருகோணமலையை மேம்படுத்துவது தொடர்பிலான இலங்கையின் இலக்கு முக்கியமானதாகும்.

பிரதமர் மோடி மற்றும் நான் நம்பிக்கை கொண்டுள்ள வகையில், இந்தியாவின் தெற்கு பகுதியிலிருந்து இலங்கை வரையிலான பல்துறைசார் பெற்றோலிய குழாய் கட்டமைப்பொன்றை உருவாக்குவதால், இலங்கையினால் வழங்கக்கூடிய உறுதியான வலுசக்தி விநியோகத்தை உறுதிப்படுத்த முடியும் என்பதே பிரதமர் மோடியினதும் எனதும் எதிர்பார்ப்பாகும்.

சமூக - பொருளாதார அபிவிருத்தியின் அதிகமான இலக்குகளை அடைந்து கொள்வதற்கான எமது பொது முயற்சியை வெற்றிகொள்வதற்காகவும், எமது மக்களின் போஷாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்கான பால் உற்பத்தி மற்றும் கால்நடை துறைகளில் எமது ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக்கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசித்தோம்.

கல்வித்துறையின் ஒத்துழைப்பு எமது இருதரப்பு உறவுகளின் முக்கிய அம்சமாக காணப்படுகிறது. இந்திய உதவியுடன் இலங்கைக்குள் புதிய உயர்கல்வி நிறுவனங்களை நிறுவுவது முக்கியமானதென நம்புகிறோம். இதனால் எமது இளைஞர், யுவதிகளில் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்த முடியும் என்பதோடு அவர்களை தேசிய அபிவிருத்தி பொறிமுறைக்குள் உள்வாங்கப்படுவர்.

எமது இருதரப்பு தொடர்புகளை மீளாய்வுச் செய்றவதற்காகவும், உலக மற்றும் கலாசார தொடர்புகளை வலுவாக பயன்படுத் திக்கொள்ளவும் நவீன உலகத்தில் எமது எதிர்கால எதிர்பார்ப்புக்களுக்கான நம்பிக்கையை உறுதிப்படுத்த எனது இந்திய விஜயம் வாய்ப்பளித்துள்ளது என நம்புகின்றேன்.

இன்று நாம் நடத்திய கலந்துரையாடல் இலங்கை - இந்தியாவின் அடுத்த 25 வருடங்களுக்கான அடித்தளத்தை இடும் என்றும், இலங்கை அனைத்து சமூக குழுக்களினதும் நிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய ஒருமைப்பாடு இலங்கையின் அனைத்து சமூகத்தினர் மத்தியிலுமான நல்லிணக்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு சுபீட்சமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான எனது நோக்கத்திற்கு உதவும் என நம்புகின்றேன்." - என்றார்.

# கொக்குத்தொடுவாய் அகழ்வுக்கான செலவினை யார் பொறுப்பெடுப்பது?

## எழுந்துள்ள சிக்கலால் தோண்டும் பணிகளில் பின்னடைவு

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனித புதைகுழியை முறையாக அகழ்வதற்கான பணிகள் நீண்ட காலம் எடுக்கக்கூடும் என்பதால், அதற்கான நிதியை எங்கிருந்து பெறுவது, யார் அல்லது எந்தத் திணைக்களம் அந்தச் செலவுகளைப் பொறுப்பெடுப்பது என்கிற கேள்விகள் எழுந்துள்ளன. இது தொடர்பான முழுமையான தெளிவைப் பெறும் வரையில் ஓகஸ்ட் 8ஆம் திகதி வரை அகழ்வுப் பணிகள் ஒத்துவைக்கப்பட்டுள்ளன.

.கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழியைத் தோண்டுவதற்கான பூர்வாங்கப் பணிகள் கடந்த தடவை இடம்பெற்றபோது அவை சர்வதேச நியமங்களுக்கு அமைய இடம்பெறவில்லை என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. இதையடுத்து புதைபடிம அகழ்வுகளில் நிபுணத்துவம் பெற்ற தொல்பொருள் திணைக்களத்தினரை அழைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. ஆனால், அப்படி அழைக்கப்படுபவர்களுக்கான செலவுகள் உட்பட புதைகுழியைத் தோண்டும் பணிகளை முன்னெடுப்பதற்கான நிதியை எந்தவழியில் திரட்டுவது என்பது தொடர்பில் சிக்கல் எழுந்துள்ளது.

இதனால் தேவையான நிதியைத் திரட்டும் வழிவகைகளை ஆராயும் வகையில், உத்தேச செலவு விபரத்தினை தாக்கல் செய்யுமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிபதி ரி. பிரதீபன் முன்னிலையில் இது தொடர்பான விடயம். வியாழக்கிழமை ஆராயப்பட்டது. அப்போதே உத்தேச செலவு விவரத்தை முன்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அகழ்வுப் பணியை மேற்கொள்ள யாழ். பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் புஷ்பரட்ணம், ராஜ் சோமுதேவா ஆகியோரை நீதிமன்றம் அழைத்துள்ளது.

இதேவேளை, தொல்பொருள் திணைக்களம் இந்தக் கலந்துரையாடலில் நீதிமன்றில் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# சமஷ்டி குறித்து கனவு காணாதீர்

## தமிழ்த் தலைவர்களுக்கு சுரேன் ராகவன் எச்சரிக்கை



நாட்டில் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுக்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்போவதில்லை என்று சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பான தமிழ் அரசியல் பிரதிநிதிகளின் கருத்துக்களானவை தெற்கு இளைஞர்களைத் தூண்டிவிட்டு, மீண்டும் ஒருபோருக்கு வழிவகுக்கும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக நான்கு சுற்றுப் பேச்சுகளை முன்னெடுத்துள்ளார்.

இந்தபேச்சுகளில் ஈடுபட்ட தமிழ் பிரதிநிதிகள், இது அவசியமானது அல்ல என்றும் சமஷ்டி முறையிலான தீர்வே தங்களுக்கு வேண்டும் என்றும் வெளியே சென்று கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

நான் இவர்களிடம் ஒன்றைக் கூறிக்கொள்கிறேன். கனவு காணாதீர்கள்.

சமஷ்டிக் கோரிக்கையுடன் வட்டுக்கோட்டைவரை சென்று, மீண்டும் 2009 ஆம் ஆண்டு இந்நாடு பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் இரத்த ஆறுக்கு மத்தியில் திரும்பி வந்துள்ளது.

இவ்வாறு இருக்க மீண்டும் போரொன்றையா நீங்கள் எதிர்ப்பார்க்கின்றீர்கள்? அப்படியென்றால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அன்று சரத்பொன்சேகாவுடன் இணைந்து, சிங்கக் கொடியை தூக்கிப் பிடித்து, ஐக்கிய இலங்கைக்குள் பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றுக்கு செல்வோம் என்றேயாழில் கூறியிருந்தார்.

அப்படியென்றால், இப்போது ஏன் இதற்கு மாறான ஒரு கருத்தை இவர்கள் வெளியிடவேண்டும்?

அதுவும் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கும்போதே ஏன் இவ்வாறு கூற வேண்டும்? இந்த நாட்டை ஒருபோதும் பிரிக்க இடமளிக்க முடியாது. இனியும் இந்நாடு இனவாதப் போருக்கு முகம் கொடுக்காது.

எனவே, மீண்டும் ஒரு போருக்குள் நாட்டைத் தள்ள முயற்சிக்கவேண்டாம். அமைதியாக இருக்கும் தெற்கு இளைஞர்களை மீண்டும் தூண்டிவிட வேண்டாம்..

இது எச்சரிக்கை கிடையாது. உண்மையைத்தான் கூறுகிறேன். இந்நாட்டிலுள்ள அப்பாவி விவசாயிகள் முதற்கொண்டு அனைவரும் இதனைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அமெரிக்கத் தூதுவரையும், இந்திய உயர்ஸ்தானிகரையும் மகிழ்ச்சிப்படுத்த நாம் கருத்துக்களை வெளியிட வேண்டிய அவசியம் கிடையாது. நாம் ஓர் இலக்கைநோக்கிபயணித்துக் கொண்டிருக்கும்போது, அந்தப் பயணம் முடிவடையும் முன்னரே சமஷ்டியைக் கோருவதை, வடக்கு மக்கள்கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதனை நான் வடமாகாண முன்னாள் ஆளுநர் என்ற வகையில் உறுதியாகக்கூறுகிறேன்.

தமிழ் இனவாதிகளால் மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்பாட்டை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. - என்றார். (05)




# பெண்கள், சிறுவர்கள் 10 லட்சம் பேர் பட்டினி

இலங்கையில் 9 மாகாணங்களையும் உள்ளடக்கிய கணக்கெடுப்பின்படி 5 வயதுக்குட்பட்ட சுமார் 10 லட்சம் சிறுவர்கள் மற்றும் பெண்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

5 வயதுக்குட்பட்ட 300,746 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் 671,142 பெண்கள் உட்பட நாடு முழுவதும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 971,888 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்திலேயே அதிகளவான மக்கள் ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 05 வயதுக்குட்பட்ட 85,847 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளும் 196,197 பெண்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் 05 வயதுக்குட்பட்ட 30,393 போசாக்கு குறைபாடுள்ள சிறுவர்களும், 126,976 பெண்களும் , தென் மாகாணத்தில் 05 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 37,032 பேரும், பெண்கள் 79,254 பேரும் இருப்பதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வடமேற்கு மாகாணத்தில் 47,765 குழந்தைகளும் 68,763 பெண்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வடமத்திய மாகாணத்தில் 19,067 சிறுவர்களும் 38,869 பெண்களும் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஊவா மாகாணத்தில் 05 வயதுக்குட்பட்ட 18,278 சிறுவர்களும், 46,175 பெண்களும், சப்ரகமுவ மாகாணத்தில் 17,180 சிறுவர்களும் 54,394 பெண்களும் இருப்பதாக தெரியவந்துள்ளது. (05)



# பேராதனை வைத்தியசாலையில் யுவதி சாவு செப்டர் எக்ஸோன் மருந்தே வழங்கப்பட்டது

## பணிப்பாளர் உறுதிப்படுத்தினார்

அண்மையில் பேராதனை வைத்தியசாலையில் உயிரிழந்த சாமோதி சந்தீபனிக்கு சர்சைக்குறிய செப்டர் எக்ஸோன் மருந்தே வழங்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

'செஃப்டர் எக்ஸோன் மருந்து பயன்பாட்டால் உயிரிழப்பு நிகழ்ந்தது எனச் சந்தேகிக்கப்படும் சம்பவம் ஒன்றே மீண்டும் பதிவாகியுள்ளது. சில மருந்துகளால் சிலருக்கு ஒவ்வாமை ஏற்படலாம். ஆனால் தற்போது காணப்படும் நிலை மிகவும் அசாதாரணமானது. நாட்டில் பல பிரதேசங்களிலும் ஒரே மாதிரியான சம்பவங்கள் தொடர்ச்சியாக பதிவாகின்ற காரணத்தால் ஒவ்வாமை என்ற விடயத்துக்கு அப்பால் சென்று இந்த மருந்தில் சிக்கல் இருக்கின்றதா என்பது தொடர்பாக ஆராய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

ஆகவே, இந்தச் சம்பவங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக சந்தேகங்களை மாத்திரம் எழுப்பாமல் உரிய மருந்துகளை உரிய முறையில் பரிசோதனைக்ட்படுத்தி இது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். -என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# குழந்தைகளுக்குத் தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டுள்ளது

15 வயது வரையான குழந்தைகளுக்கு கட்டாயமாக போடப்படும் தடுப்பூசிகளை போட வேண்டும் என தேசிய நோய்த்தடுப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சமித்த கினிகே கூறியுள்ளார்.

அத்துடன், தேசிய நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் 15 வயது வரையான குழந்தைகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டாம் என தொற்று நோய் தடுப்புப் பிரிவு பொதுமக் களுக்கு அறிவித்துள்ளது.

தேசிய நோய்த்தடுப்பு திட்டத்துக்காக கொண்டு வரப்பட்ட தடுப்பூசிகள் உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்டவை மட்டுமே எனவும், நோய் தடுப்புக்காக உரிய தடுப்பூசிகளை பிள்ளைகளுக்கு வழங்க பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார். (05)

# ஜனாதிபதி ரணிலின் செயற்பாடுகள் தமிழரை ஏமாற்றுவதை போலுள்ளன

## இராதாகிருஷ்ணன் கூறுகிறார்



*13 ஆவது திருத்தம் இந்த நாட்டில் இருக்கும் சட்டம். அதனை ஜனாதிபதி இந்தியாவுக்கு சொல்வதில் பயனில்லை. 13 பிளஸ் பற்றி பேசினால் அதனை வரவேற்போம். அதனால் ஜனாதிபதியின் செயற்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றுவது போன்றே உள்ளன என மலையக மக்கள் முன்னணி தலைவர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -*

*நாட்டில் சுயாதீனமாக இயங்கிய பல நிறுவனங்கள் இன்று சுயாதீனத்தை இழந்த நிலையில் இருக்கின்றன. பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு போன்றவை நியமிக்கப்பட்டாலும் அவை அரசாங்கத்தின் செல்வாக்கில் இயங்குகின்றன. அதேபோன்ற நிலைமை மத்திய வங்கிக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது.*

*இதேவேளை ஜனாதிபதி இந்திய பயணத்தை மேற்கொண்டுள்ளார். அதனை நாங்கள் வரவேற்கிறோம். அவர் இந்திய பயணத்துக்கு முன்னர் தமிழ்க் கட்சிகளை சந்திப்பது வழக்கமாகியுள்ளது. 13 ஆவது திருத்தம் என்பது இந்த நாட்டில் இருக்கும் சட்டம்.*

*அதனை இந்தியாவிடம் சொல்வதில் என்ன உள்ளது. 13 பிளஸ் பற்றி கூறினால் பரவாயில்லை. ஆனால் 13 தொடர்பில் கதைத்து அந்த நிகழ்ச்சி நிரலை இந்தியாவுக்கு கொண்டு செல்வதுஎன்பது ஜனாதிபதி இந்த நாட்டு தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகவே உள்ளது.*

*நாட்டில் உள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக என்று கூறிக்கொண்டு இந்தியாவுக்கு சென்று பல ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கு சென்றிருக்கின்றாரா? என்ற நிலையே ஏற்பட்டுள்ளது.-என்றார். (05)*

# நுண்கடன் திட்டம் புற்றுநோய் போல் பரவியுள்ளது மத்திய வங்கி பொறுப்பை நிறைவேற்றவில்லை

## நீதியமைச்சர் குற்றச்சாட்டு

நாட்டில் நுண்கடன் நிதி திட்டம் புற்றுநோய் போல் பரவியுள்ளது. இதனால் கிராமப்புற மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நுண்கடன் நிதி திட்டத்தில் மத்திய வங்கி தனது பொறுப்பை நிறைவேற்றவில்லை என நீதி,சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி சட்டமூலம் மீதான விவாதத்தின்போது பிரமிட் கொடுக்கல் வாங்கல் முறைமை, நுண்கடன் நிதி திட்டம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரமிட் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. பிரமிட் முறைமை ஆசிய வலயத்துக்குட்பட்ட சிங்கப்பூர் நாட்டில் முதலாவதாக பிரமிட் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றபோது 1973 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் பிரமிட் கொடுக்கல் முறைக்கு எதிராக சட்டம் இயற்றப்பட்டு,அந்த முறைமைக்கு அங்கு தடை விதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிரமிட் கொடுக்கல் வாங்கல் மலேசியாவுக்கு சென்றது. அங்கும் தடை



விதிக்கப்பட்டதன் பின்னர் தற்போது இலங்கையில் இந்த முறைமை ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

பிரமிட் கொடுக்கல் வாங்கல் முறைமை தொடர்பில் மத்திய வங்கி பல முறை அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது. ஆனால் அவற்றைக்கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே, நாடாளுமன்றத்தின் ஊடாக அந்த முறைமைக்கு எதிராக சட்டம் இயற்ற வேண்டும்.

அத்துடன் நுண்கடன் நிதி திட்டத்தால் கிராமப்புற மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். நுண்கடன் நிதி திட்டம் புற்றுநோய் போல் பரவியுள்ளது.

இதனால், கீழ் மட்ட மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கு உண்டு. ஆனால், அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை, இனியும் எடுக்கப் போவதுமில்லை.

நுண்கடன் திட்ட நிதியங்கள் தொடர்பில் கண்காணிக்க விசேட நிறுவனம் ஒன்று வேண்டும். அதற்குத் தனியான சட்டம் இயற்றப்படவேண்டும். ஆகவே,

எதிர்வரும் காலங்களில் அதற்கான சட்ட மூலம் கொண்டுவரப்படும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். -என்றார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஒரு செயலகம் தேவை

முல்லைத்தீவு மாவட்ட எல்லைப் பகுதியான கொக்குத் தொடுவாயில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியைத் அகழ்வதற்கான நிதி ஆதாரங்களைத் தேடுவதில் சிக்கல் எழுந்துள்ளது. இதுபோன்ற பணிகள் மிக நீண்ட காலத்திற்குச் செல்லக்கூடியவை. மக்களின் உணர்வுகளோடு நெருக்கமான தொடர்புகளையும் அதீத கவனத்தையும் பெற்றுள்ள இதுபோன்ற பணிகளை அவசர அவசரமாக மேற்கொள்ளவும் முடியாது, பொறுமையாகவும் நிதானமாகவும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலுமே மேற்கொள்ள முடியும். அதனால் இவை அதிக செலவு பிடிக்கக்கூடியவை. இத்தகைய பணிகளை மேற்கொள்வதற்கான நிதித் தேட்டம் நீதிமன்றங்களுக்கு இல்லாதநிலையில்அதனைத்திடீரெனத்தேடிக்கொள்வதும் நீதிமன்றத்திற்குச் சிரமமான காரியமே!

அதேநேரம் கொக்குத்தொடுவாய் புதைகுழிகள் அல்ல இனிவரும் காலங்களில் இதுபோன்ற பல புதைகுழிகளும் வடக்கு கிழக்கில் கண்டறியப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஏற்கனவே செம்மணிப் புதைகுழி அகழப்பட்டுள்ளது, மன்னாரிலும் ஒரு பெரும் புதைகுழி அகழப்பட்டிருக்கின்றது. இவை இரண்டுக்குமே வெவ்வேறு நிதி மூலாதாரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. செம்மணிப் புதைகுழிகளின் அகழ்வுக்கு அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்து பணம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மன்னார் புதைகுழி விவகாரத்தில் அங்குள்ள வர்த்தகர்கள் மற்றும் தன்னார்வலர்கள் நிதி உதவிகளை வழங்கியிருக்கிறார்கள்.

கொக்குத்தொடுவாயைப் பொறுத்தவரையில் இன்றைய ஆட்சியாளர்கள் அதற்கு அரச நிதியிலிருந்து ஒதுக்கீடு வழங்குவார்கள் என்று ஒருபோதும் எதிர்பார்க்கமுடியாது. பொருளாதார நெருக்கடியைக் காரணம்காட்டி புதைகுழி அகழப்படுவதை காலவரையறை இன்றிப் பிற்போடுவதற்கு வேண்டுமானால் அவர்கள் முயலக்கூடும். எனவே அரசுக்கு வெளியிலான தன்னார்வல நிதி ஆதாரங்களின் மூலம்தான் இந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

புதைகுழியை அகழ்வது மட்டுமல்ல, அதன் பின்னரும் பல பணிகளுக்கு நிதி தேவையாக இருக்கும். மீட்கப்படும் எலும்பு எச்சங்கள் யாருடையவை என்று அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் என்று வரும்போது, சாத்தியப்பாடுடைய பலரையும் அழைத்து மாதிரிகள் பெற்று அவற்றை மரபணு (டிஎன்ஏ) சோதனைகளுக்கு உட்படுத்தி என்று செலவுமிக்க பல பணிகளையும் ஆற்றவேண்டியிருக்கும். அவற்றுக்கும் பணம் தேவையாக இருக்கும். இவ்வாறு எலும்பு எச்சங்களுக்கு உரியவர்களை அடையாளம்காண்பதற்கானகட்டத்தில்செம்மணிப்புதைகுழி விசாரணைகள் கைவிடப்பட்டு கிடப்பில் போடப்பட்டமைக்கு நிதி ஆதாரமின்மையும் ஒரு காரணம் என்பதை இங்கு கவனத்தில் எடுக்கவேண்டும்.

எனவேகொக்குத்தொடுவாய்புதைகுழிகளைத்தோண்டும் பணிகளுக்கான நிதி ஆதாரத்தைத் திரட்டுவதற்கு தமிழர் தரப்பு முறையான நடவடிக்கை ஒன்றை ஒழுங்குபடுத்து வது அவசியம். அது இந்த வழக்கு விசாரணைகள் நிறைவுபெறும் வரையில் தேவையான அனைத்து நிதி வளங்களையும் தரக்கூடியதாக இருக்கவேண்டும். அதுமட்டுமல்ல வழக்கு விசாரணைகளுக்கு உதவக்கூடிய புறக்காரணிகளை ஒழுங்குபடுத்தும் பணிகளிலும் அக்கறை செலுத்தப்படவேண்டும். குறிப்பாக, புதைகுழிக்குள் இருக்கக்கூடியவர்கள் என்று கருதப்படுபவர்களின் உறவினர்கள் எங்கிருக்கிறார்கள் என்று கண்டறிவது, அவர்களை நீதிமன்ற விசாரணைகளுக்காக அழைத்து வருவது, அப்படி வருபவர்களின் உடனடித் தேவைகளைக் கவனித்துக்கொள்வது என்று பல பணிகள் இருக்கின்றன. அவற்றை மேற்கொள்ளாத இந்தப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுப்பது சிரமமாகலாம்.

இது தொடர்பான அனுபவம் ஏற்கனவே உண்டு. செம்மணி புதைகுழி விசாரணைகளுக்கு இன்று என்ன நடந்தது என்று எவரிடமும் தகவல் இல்லை. அந்த வழக்குத் தொடர்பான விசாரணை ஆவணங்களோ, வேறு தகவல்களோ எங்கும் இல்லை. அதுபோன்ற நிலை கொக்குத்தொடுவாய்க்கும் இனிவரக்கூடிய மனிதப் புதைகுழிகளுக்கும் ஏற்படக்கூடாது. எனவே இதற்கென ஒரு செயலகத்தை – அலுவலகத்தை – போதிய நிதி ஆதாரங்களுடன் உருவாக்குவதில் தமிழர்கள் கவனம் செலுத்துவது அவசியம். கொக்குத்தொடுவாயுடன் அந்தப் பணிகளைத் தொடங்குவது காலத் தேவை.




# மணிப்பூரில் மலைவளங்கள் சூறையாடல்: இன மோதலுக்கு நிலம்தான் பிரச்சினையா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களுள் ஒன்றான மணிப்பூர், கடந்த மே முதல் வாரத்திலிருந்து எரி தணலாக நீறுபூத்துக் கொண்டிருக்கிறது. மணிப்பூரில் பெரும்பான்மையாக வாழ்கின்ற மேய்தி மக்களுக்கும், குக்கி பழங்குடியின மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில்தான், அம்மாநிலம் கலவர பூமியாகியுள்ளது.

### நிலம்தான் பிரச்சினை?

மணிப்பூரின் சமவெளிப் பகுதிகளில் உள்ள மேய்திக்களுக்கும், மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடிகளுக்கும் இடையிலான இன மோதல்களுக்கு அடிப்படையாக இருப்பது நிலம்தான்.

மேய்திக்கள் தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கோருவதற்குக் காரணம், மலைப்பகுதிகளில், பழங்குடியினர் அல்லாதவர் நிலம் வாங்க முடியாது என்கிற கட்டுப்பாடுதான். தங்களை பழங்குடியினராக வகைப்படுத்தினால் மலைப்பகுதிகளில் தங்களால் நிலம் வாங்க முடியும் என மேய்திக்கள் கருதிகிறார்கள்.

எல்லைப்பகுதி மாநிலமான மணிப்பூரில், வங்கதேசம், மியான்மர் ஆகிய அண்டை நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் அகதிகளாகக் குடியேறுகின்றனர். இதனால், சமவெளிப்பகுதிகளில் இடப்பற்றாக்குறை ஏற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அதுவெ மேய்திக்கள் மலைப் பகுதிகளிலும் கால்வைக்க விரும்புவதற்கான காரணமாகக் கூறப்படுகின்றது.

### எரி தணலாக நீறுபூத்த மணிப்பூர்

மணிப்பூர் மாநிலத்தின் மக்கள் தொகையில் மேய்திக்கள் சுமார் 53 சதவிகிதமாக உள்ளனர். கல்வி, அரசியல், பொருளாதாரம் எனப் பல துறைகளிலும் மேய்தி இன மக்களே செல்வாக்குச் செலுத்துபவர்களாக உள்ளனர். மாநில ஆட்சியில் மொத்தமுள்ள 60 சட்டப்பேரவை உறுப்பினர்களுள், 40 சட்டமன்ற உறுப்பினர்கள் மேய்திக்கள்.

அத்துடன்தலைநகரானஇம்பாலைச் சுற்றியுள்ள சமவெளிப்பகுதிகளில் மேய்தி இனத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர்.

இவ்வாறு மணிப்பூரில் ஆதிக்கம் செலுத்தும்மேய்திக்கள், 2013ஆம்ஆண்டு தொடங்கி தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்தஏப்ரல்19, 2023 அன்று, மேய்திக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது குறித்து நான்கு வாரங்களுக்குள்ஒன்றிய அரசிற்குதனது பரிந்துரைகளை மாநில அரசு வழங்க வேண்டும் என்று வழிகாட்டியிருந்தது மணிப்பூர் உயர்நீதிமன்றம்.

ஏற்கெனவே, தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற உயர்சாதியினர் இடஒதுக்கீடுகளை மேய்திக்கள் அனுபவித்துக் கொண்டிருக்க, தற்போது மேய்திக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தால் தங்களது கல்வி, வேலைவாய்ப்பு பாதிக்கப்படும் என்றும், அதைவிட முக்கியமாக மலைப்பகுதிகளில் தங்களுக்குள்ள உரிமைகள் பறிபோகும் என்றும் குக்கி, நாகா உள்ளிட்ட பழங்குடியினர் இந்த யோசனையைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

### குக்கி-மேய்தி இன பிளவு

மேய்திக்களுக்கு சாதகமாக அமைந்த உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலை எதிர்த்து, பழங்குடி அமைப்புகள் போராடத் தொடங்கின. பழங்குடியினரின் போராட்டங்களை மேய்திக்களும் எதிர்க்கத் தொடங்கினர். இப்படி இருதரப்புக்கு இடையில்




மோதல்போக்கு மூண்டெழுந்துள்ளது.

மேய்திக்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள். நாகா, குக்கி போன்ற பழங்குடியினரில் பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்கள். ஆகவே, மேய்திக்களுக்கும் குக்கிகளுக்குமான மோதல் இந்து, கிறிஸ்தவ மோதலாகவும் மாற்றம் பெற்று வருகிறது.

அனைத்து மணிப்பூர் பழங்குடி மாணவர் சங்கம் கடந்த மே 3 அன்று தலைநகர் இம்பால் உள்ளிட்டு சுரசந்த்பூர், தெங்னௌபால், சந்தல், கங்போக்பி, நோனி, உக்ருள் ஆகிய பகுதிகளில் பேரணி நடத்தியது. இப்பேரணியில் பள்ளி மாணவர்கள் உள்ளிட்டு அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

அதைத்தொடர்ந்து, குக்கிகள் அதிகம் வசிக்கும் சுரசந்த்பூர் மாவட்டம் மற்றும் தலைநகர் இம்பால் போன்ற இடங்களில் வன்முறை வெடித்தது. இவ்வன்முறையில் குக்கிக்களும் மேய்திக்களும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டனர். இம்பாலில் மேய்தி மக்களின் மதக் கொடிகள் உள்ள வீடுகளை விட்டுவிட்டு குக்கிகளின் வீடுகள் குறிவைத்துத் தாக்கப்பட்டன.

### சிதைந்து கிடக்கும் மணிப்பூர்

சுரசந்த்பூரில் சிறுபான்மையாக உள்ள மேய்திகளின் வீடுகள் தாக்கப்பட்டன. அதேவேளையில், குக்கிகளைச் சேர்ந்த சிலர் மேய்திகள் மீது தாக்குதல் தொடுத்தபோது, அங்கிருந்த குக்கி இனப் பெண்கள் மேய்தி மக்களை அரணாக சூழ்ந்து நின்று காப்பாற்றிய சம்பவமும் அரங்கேறியுள்ளது.

தொடர்ச்சியான வன்முறைக் கலவரங்களால், வீடுகள் சூறையாடப்பட்டன. பள்ளிக்கூடங்கள், கடைகள் ஆகியவை அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. குக்கி இனத்தைச் சேர்ந்தவரின் மருத்துவமனைகளும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. குக்கிகள் கிறித்தவர்கள் என்பதால், இதுவரை 120க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் தாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில தேவாலயங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

மேலும், சுரசந்த்பூர் பகுதியில் அமைந்திருந்த, குக்கி பழங்குடிகள் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போர் நடத்திய வரலாற்றுப் புகழ்பெற்ற நூற்றாண்டு நினைவுச் சின்னமும் வன்முறைக் கும்பலால் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது.

மே 3-இல் நடைபெற்ற வன்முறையால், 50க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். மற்றும் 23 ஆயிரத்துக்கும்மேற்பட்ட மக்கள்தங்களது வாழ்விடங்களைவிட்டு புலம்பெயர்ந்திருக்கின்றனர். உயிரிழந்தவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் குறித்த அதிகாரப்பூர்வமான அறிக்கையை மாநில அரசு இதுவரை வெளியிடவில்லை.

மணிப்பூரின் நிலைமை, ஒரு உள்நாட்டுப் போர் நடந்ததைப் போல இருக்கிறது என்கிறார் சுரசந்த்பூரைச் சேர்ந்த வழக்கறிஞரும் தன்னார்வலருமான ஜான் மாமாங்க். மேலும், இம்பால் மற்றும் இதர பகுதிகளில் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்ட கும்பலை பொலிஸார் தடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர் உள்ளூர் மக்கள்.

மேலும், மணிப்பூரில் வன்முறை கட்டுக்கடங்காமல் சென்றபோது, பிரதமர் மோடியால் பெருமையாகப் புகழப்பட்ட மல்யுத்த வீராங்கனை மேரிகோம், எனது மாநிலம் பற்றி எரிகிறது; உதவுங்கள்! என்று பிரதமர் மோடிக்கு டிவிட்டர் வாயிலாக கோரிக்கை விடுத்திருந்தார்.

> மேய்தி–குக்கி இன மக்களுக்கு இடையே ஏற்படும் மோதல்களுக்கு நிலம்தான் அடிப்படையாக இருக்கிறது. குக்கி–மேய்தி இன மக்களுக்கிடையிலான பிளவை ஏற்படுத்தி, மற்றொருபுறம் மணிப்பூரின் மலைவளங்களை சூறையாடக் கொடுப்பதற்கான தரகுவேலையே இன்றைய வன்முறைகளுக்கு மூல காரணியாக அமைந்திருக்கிறது

### கட்டவிழ்த்துவிட்ட வன்முறை

மேய்தி இனத்தைச்சார்ந்த இனவெறி அமைப்புகளே குக்கிகள் மீது வன்முறை வெறியாட்டத்தை நிகழ்த்தியுள்ளன என்பதற்கான சான்றுகள் தற்போது வெளிவந்துள்ளன. மன்னர் காலத்திய மணிப்பூரின் பெருமையையும், மேய்திக்களின் பண்பாடான சனமகி (Sanamahi) பண்பாட்டை மீட்டமைக்கவேண்டும் என்ற கொள்கையையும் உடைய கருஞ்சட்டை அணிந்த இனவெறிக் கும்பல்தான் அரம்பை தெங்கால் மற்றும் மேய்தி லீபன் கும்பல்களாகும்.

கடந்த 300 வருடங்களுக்கும் மேலாக, மேய்திகளின் பண்பாடான சனமகி பண்பாடும், இந்துப் பண்பாடும் ஒன்று கலந்திருக்கிறது. மேய்திக்களின் பண்பாட்டில் இந்துமதப் பழக்க வழக்கங்களும், சம்பிரதாயங்களும் மேலோங்கி இருக்கின்றன. மேய்திகளின் பண்பாட்டை இந்துத்துவமயமாக்கி, அவர்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று, குக்கிகளுக்கும் மேய்திகளுக்கும் இடையேயான இனவன்முறை தீமூட்டிக் குளிர்காய்கின்றது இந்தியாவின் மத அரசியல். அரசியல் சூழ்ச்சியின் இன வன்முறையால் எரி தணலாக நீறுபூத்த வண்ணமாய் உள்ளது மணிப்பூர்.

இதன் விளைவே அப்பாவி மேய்தி இன மக்களும், குக்கி இன மக்களும் பகையாளிகளாக மோதிக் கொண்டு உள்ளார்கள்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ரணிலுக்கு எந்த தார்மீக உரிமையுமில்லை

## சாகர காரியவசம் இடித்துரைப்பு




13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்குளந்தவிததார்மீக உரிமையும் இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜனபெரமு-னவின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையிலேயே தற்போதைய ஜனாதிபதி அதிகாரத்தில் உள்ளார் எனத் தெரிவித்துள்ள சாகர காரிய-வசம், முன்னாள் ஜனாதிபதிகள்எவரும்நடைமுறைப்படுத்தாத 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கானதார்மீக உரிமை ரணில் விக்கிரமசிங்கவிற்கு கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

பலவந்தமாக 13 ஆவது திருத்தத்தைஅறிமுகப்படுத்திய முன்னாள்ஜனாதிபதிஜே. ஆர் ஜெயவர்த்தன, நாடாளுமன்றத்தில் அதற்கு ஆதரவளித்த ரணசிங்க பிரேமதாஸ, டிபி விஜயதுங்க அதிகாரங்களை பரவலாக்கவேண்டும் என்ற உறுதியானநிலைப்பாட்டுடன் ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜ பக்ஷ, தமிழ் முஸ்லீம் கட்சிகளின் வலுவான ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த மைத்திரி பால சிறிசேன ஆகியோர் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவில்லை என சாகரகாரியவசம் மோர்னிங்கிற்கு தெரிவித்துள்ளார்.

புலனாய்வு தகவல்கள் போன்றவற்றின் மூலம் அவர்கள் அதனை நடைமுறைப்படுத்தாமல் விட்டமைக்கான கடுமையான காரணங்கள் இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள பொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளர் ஆகவே ரணில்விக்கிரமசிங்க இந்த காரணங்களை மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும், அந்த காரணங்கள் இன்னமும் நீடிக்கின்றனவா என்பதை கண்டறிவதற்காக புலனாய்வு அமைப்புகளின் அறிக்கைகளை பெறவேண்டும்எனவும்குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மக்கள் வழங்கிய அதிகாரத்தையே தற்போது ரணில் விக்கிரமசிங்க அனுபவிக்கின்றார் அதிகாரப்பரவ-லுக்கு மக்கள் ஆணை வழங்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக நாடு ஸ்திரமற்ற நிலையில் காணப்பட்டவேளை அதிகாரப்பரவலுக்காக மக்கள் எங்களிடம் அதிகாரத்தை வழங்கவில்லை கோட்டாபய ராஜபக்ஷ தேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதாக உத்தரவாதம் அளித்தார். 69 லட்சம் மக்கள் அவருக்காக வாக்களித்தனர.; நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபெரும்பான்மையை வழங்கினர். ஆகவே எவரும் மக்களின் எதிர்பார்ப்பிற்கு எதிராக செயற்படமுடி யாது. இதன்காரணமாகவேநாங்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அதற்கானதார்மீகஅதிகாரமில்லைஎனத்தெரிவிக்கின்றோம் எனவும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய அவசியமிருந்தால் அவர் தேர்தலை நடத்தலாம். 13 ஆவதுதிருத்தத்தைநடைமு-றைப்படுத்தப்போகின்றேன் என மக்களிடம் தெரிவிக்கலாம். மக்கள் அதனை ஏற்றுக்கொண்டால் அவர்கள் ரணில்விக்கிரமசிங்கவை பதவிக்கு கொண்டு வருவார்கள். ரணில் விக்கிரமசிங்கவிற்குநாங்கள் இதனை தெரிவித்துவிட்டோம் என சாகர காரியவசம் தெரி வித்துள்ளார். (05)

## கூட்டுறவு ஆணைக்குழுவிற்கு கிழக்கில் புதிய உறுப்பினர்



சிரேஷ்ட ஊடகவியலாளரும், எழுத்தாளருமான யூ.எல். நூருல்ஹுதா, கிழக்குமாகாணகூட்டுறவுஆணைக்குழு பணிப்பாளர்சபைஉறுப்பினராக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து இந்நியமனம்வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. கிழக்கின் பல்வேறு சமூக பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் ஊடகவி-யலாளர்களில்ஒருவரானநூருல்ஹுதா, ஆய்வு, விமர்சன, விவரண தொடர் கட்டுரைகளையும் பத்திரிகைகளில்தொடர்ச்சியாகஎழுதிவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## அறைக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு தலவத்துகொடவில் ஒருவர் காயம்

தலவத்துகொட பகுதியில் உள்ள வீடொன்றின் அறைக்குள் புகுந்த இனந்தெரியாத நபரொருவர்துப்பாக்கியால் சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார் என தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் பொலிஸ் பாதுகாப்பில் ஸ்ரீ ஜய-வர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில், தலவத்துகொட பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் அவரது வீட்டின் அறையில் இருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் அறைக்குள் நுழைந்து 9 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கியால் மூன்று முறை சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்எனப்பொலி-ஸார் குறிப்பிடுகின்றனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், திட்டமிட்ட குற்றக்குழுவைச் சேர்ந்த 'தினுக' என்பவரே காயமடைந்துள்ளார்எனப்பொலி-ஸார் தெரிவிக்கின்றனர். (05)



## ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நீடிப்பு!

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கிய ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை மேலும் 04 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஐரோப்பிய ஆணைக்குழு இந்தத் தீர்மானத்தை வெளியிட்டுள்ளது.

குறித்தவரிச்சலுகைஇந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைய இருந்தமை குறிப்பிடத் தக்கது. (05)



OKAYA ELECTRIC VEHICLES

dsl We lead the way...!

# பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable
## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து | வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

## இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# பதின்மூன்றாம் திருத்தக் காவடியை தமிழ் தலைமைகள் தூக்குவது ஏன்?

## மக்கள் பாடம் படிப்பிப்பார்கள் என்கிறார் அருட்தந்தை மா.சத்திவேல்

பதின்மூன்றாம் திருத்தத்தை அமுல்படுத்த இந்தியபிரதமர் இலங்கைஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்எனதமிழ்த்தலைமைகள் காவடி தூக்குவது ஏன்? என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கானதேசியஅமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஜனாதிபதி இந்தியா செல்ல உள்ள நிலையில் வடக்குக் கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சில பிரபல கட்சிகளும் சிவில் அமைப்புகளும் பதின்மூன்றாம் திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என நேரடியாகவும்மறைமுகமாகவும்கடிதம் எழுதி உள்ளதாகச் செய்திகள் வெளிவருகின்றன.

2009 வரை தமது உண்மை முகத்தை வெளிக்காட்டாது இருந்தவர்கள் தற்போது தனது சுய ரூபத்தில் ஒளி காட்டி இருப்பதன் மூலம் 2009 இனப்படுகொலைக்கு இவர்களும் குற்றவாளிகளோ என சந்தேகம் கொள்ளவைக் கின்றது. இற்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் 13 ஆம் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.தனித்துவம்கொண்ட தேசிய இனமாக தமது தேசத்தில் சுயநிர்ணய உரிமையோடு வாழ்வதற்கான போராட்டத்தை சர்வதேசமும் வியக்கும் அளவில் முன்னெடுக்கப்பட்டது.

ஒற்றை ஆட்சியின் கீழ் சுதந்திரமாக வாழ முடியாது. எமக்கான சுயாட்சி இருக்க வேண்டும் எனும் திடமான அரசியல் சிந்தனையோடு கட்டமைக்கப்பட்ட வடிவிலே போரியல் ஒழுக்கத்துடன் விடுதலை செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

தமிழர்களின் தேசியம் ஆக்கப்படுவதற்காகவே ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தம் உயிரைத் தியாகம் செய்து வீரமரணம் அடைந்தனர். இனப்படுகொலைக்கும் முகம் கொடுத்து சொத்து சுகங்களை இழந்தும், உறவுகள் காணாமலாக்கப்பட்ட வேதனைகளோடும் காயங்களின் வலிகளளோடும் அரசியல் நீதிக்காக போராடுகையில் அதற்கான நீதி என்பது 13 ஆம் திருத்தம் அல்ல.

கடந்த 2009 வரை அதனை ஆமோதிப்பது போல் பாசாங்கு காட்டி ஆயுதம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமது சுகபோக அரசியலுக்காக அரசியல் நீதிக்காக போரியல் ஒழுக்கத்தோடு நடத்தப்பட்ட விடுதலை செயற்பாடுகளை பொதுவெளியில் விமர்சித்ததோடு விடுதலை இயக்கத்துக்கும் தமக்கும் தொடர்பில்லாதது போல கருத்துக்களை வெளியிட்டதை மக்கள் பொறுத்துக் கொண்டனர்.

இலங்கை அரசின் யுத்த குற்றங்களுக்கு எதிராகவும், உறவுகள் காணாமலாக்கப்பட்டமை, நிலம் அபகரிக்கப்பட்டமை, அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் இருக்கின்றமை என்பவற்றுக்கு எதிராக நடத்தப்பட்ட மக்கள் போராட்டங்களுக்கு இவர்கள் தூரமாக இருந்தனர். இதன்போதும் மக்கள் அமைதி காத்தனர்.

ஆனால், மூன்று தசாப்தங்களுக்கு முன்னரே ஒற்றை ஆட்சி வேண்டாம். 13 ஆம் திருத்தம் வேண்டாம். சுயநிர்ணய உரிமை உடன் சுய ஆட்சிக்கு வழி வகுக்க வேண்டும் என விடுதலைப் போராட்டம் பல்வேறு இழப்புகளை சந்தித்தும் அரசியல் இலக்கோடு பயணித்துக் கொண்டிருக்கையில் அரசியல் நீதிக்காக சர்வதேசத்தின் கதவுகளை தட்டிக் கொண்டிருக்கையில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு தமிழர்களின் தலைமைத்துவங்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் காவடி தூக்கி இருப்பதேன்? இவர்களுக்கு ஜனநாயக வழியில் மக்கள் தக்க நேரத்தில் பாடம் படிப்பிப்பார்கள்.

தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் அநீதியாளர்களோடு கைகோர்த்துக் கொண்டிருப்பவர்கள், இலங்கை அரசை பிணை எடுப்பதற்கு தயக்கம் காட்டாதவர்கள் எந்த முகத்தோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பங்கு பற்றுவார்கள்? மாவீரர் நினைவு நாளில் ஒன்று கூடுவார்கள்? தமிழர்களின் தேசியத்துக்கான அரசியல் நிலைப்பாட்டை கொண்டவர்களை, யுத்த குற்றம் இழைத்த இலங்கை அரசை பிணை எடுக்கத் துடிப்பவர்களை முள்ளிவாய்க்காலிலும் மாவீரர் நாளிலும் ஏற்றப்படும் சுடர் சுட்டெரிக்கும். -என்றுள்ளது. (05)

# மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் கதிரியக்கவியலாளர்களின் பணி மந்தம்

## நோயாளிகளின் உயிர்களுக்கு ஆபத்து எனக் குற்றச்சாட்டு

மஹரகம அபேக்சா வைத்தியசாலையின் கதிரியக்க பிரிவின் கதிரியக்க நிபுணர்கள் மிகவும் மெதுவாக பணி செய்வதாகவும் இதன் காரணமாக நோயாளர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை காணப்படுவதாகவும் விமர்சனங்கள் வெளியாகியுள்ளன.

கதிரியக்க நிபுணர்களின் அசமந்த போக்கினால் 490 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் காத்திருக்கின்றனர். இவர்களில் அவசரமாக சிகிச்சை தேவைப்படுபவர்களும் உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒருநாள் தாமதம் கூட நிலைமையை குணப்படுத்த முடியாததாக மற்றும் உயிரை காப்பாற்ற முடியாததாக மாற்றிவிடும் என புற்றுநோயியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னர் மணித்தியாலத்திற்கு 8 முதல் 10 நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் தொழில்நுட்பவியலாளர்களின் திறமையின்மை காரணமாக தற்போது மணித்தியாலத்துக்கு நான்கு அல்லது ஐந்து பேருக்கு மாத்திரம் சிகிச்சை வழங்கமுடிவதாகவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களின் நடவடிக்கையை கண்டித்துள்ள மருத்துவர்கள் அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு இதற்கு தீர்வை காண வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். (05)

# ஆர்ப்பாட்டம்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக ஊழியர்கள் ஆர்ப்பாட்டமொன்றை புதன்கிழமை மாலை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கட்டுநாயக்க - அவரிவத்தை நகரில் இடம்பெற்றது.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தை சூறையாட மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிராகவும் தொழிலாளர் சட்ட திருத்தத்தை வாபஸ் பெறவேண்டும் என்று தெரிவித்துமே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களுக்கு இடையேயான ஊழியர் சங்கம், சுதந்திர வர்த்தக தொழிலாளர் தேசிய மையம், மகளிர் மையம் மற்றும் சுதந்திர வர்த்தக பொது சேவை ஊழியர் சங்கம் ஆகியவை இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# இல்லாத பிரச்சினையை தோற்றுவிப்பதை தமிழ்த் தலைமைகள் தவிர்க்கவேண்டும்

## எச்சரிக்கிறார் சரத் வீரசேகர



அதிகாரப் பகிர்வு என்ற நோக்கத்துடன் ஜனாதிபதியை சந்தித்து இல்லாத பிரச்சினையை தோற்றுவிப்பதை தமிழ் அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பலர் உயிர் தியாகம் செய்து நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துள்ளார்கள். ஆகவே, தமிழ் தேசிய கூட்டமைப்பின் நோக்கத்துக்காக நாட்டை பிளவுப்படுத்த நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

நாட்டில் இனப்பிரச்சினை என்பதொன்று உள்ளதா என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உத்தேச மத்தியவங்கி சட்டமூலம் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எடுத்த தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

நல்லாட்சி அரசாங்கம் எவ்வித நெருக்கடிகளும் இல்லாத சூழலில் சர்வதேச பிணைமுறிகளிடமிருந்து 12.5 பில்லியன் டொலர் கடன் பெற்றது. பொருளாதாரப் பாதிப்பை தீவிரப்படுத்தும் பல தீர்மானங்களை எடுத்தது.

2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எமது அரசாங்கம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டது. கொவிட் பெருந்தொற்றுத் தாக்கம், அந்நிய செலாவணி உள்வருகை வீதம் வீழ்ச்சி உள்ளிட்ட காரணிகளால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரடைந்தது.

கையிருப்பில் இருந்த டொலர் கொவிட் தடுப்பூசிக்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனால் நாடு பொருளாதாரரீதியில் மேலும் பாதிக்கப்பட்டது. ஆகவே பொருளாதாரப் பாதிப்புக்கு நல்லாட்சி அரசாங்கம் பெருமளவில் பொறுப்புக்கூற வேண்டும்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை முறையாக செயற்படுத்தப்பட்டுள்ள பின்னணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவும், அதிகார பகிர்வு கோரியும் பேச்சில் ஈடுபடுகிறார்கள்.

வீடு பற்றி எரியும் போது சிகரெட் பற்ற வைப்பதற்கு அந்த வீட்டில் இருந்து தீ எடுப்பதை போல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் செயற்படுகிறார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அவசியத்தை ஒட்டு மொத்த தமிழர்களின் அவசியம் என்று குறிப்பிட முடியாது. கூட்டமைப்பினர் தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்கின்றார்களாயின் ஏன் அவர்கள் 5 தேர்தல் நிர்வாக மாவட்டத்தில் மாத்திரம் போட்டியிடுகிறார்கள். ஏனைய மாவட்டங்களில் ஏன் அவர்கள் போட்டியிடுவதில்லை.

காணி விவகாரத்தில் ஒரு மாகாணத்துக்கு மாத்திரம் விசேட சலுகை வழங்க முடியாது. வழங்க வேண்டுமாயின் சகல மாகாணங்களுக்கும் அந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

இலங்கை ஒற்றையாட்சி நாடு. நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வரலாற்று காலத்தில் இருந்து பலர் உயிர் தியாகம் செய்துள்ளார்கள்.

30 வருடகால யுத்தத்தில் 29 ஆயிரம் படையினர் உயிர் தியாகம் செய்து, 14 ஆயிரம் படையினர் தமது உடல் அங்கங்களை நாட்டுக்காக இழந்து நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தார்கள்.

இவ்வாறான அர்ப்பணிப்புக்களுடன் பாதுகாத்த ஒற்றையாட்சியை தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் அரசியல்வாதிகளின் நோக்கத்துக்காக பிளவுபடுத்த நாங்கள் இடமளிக்க போவதில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இந்தியா பலவந்தமான முறையில் அறிமுகப்படுத்தியது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் தற்போது வலுவற்றுள்ளது.

ஏனெனில் இந்தியா பல நிபந்தனைகளை அமுல்படுத்தவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது விடுதலை புலிகள் அமைப்பின் மறைமுக சக்தி. விடுதலை புலிகளின் ஆட்சியில் தமிழர்கள் 30 வருடங்கள் வாழ்ந்தார்கள். ஆகவே புலிகளின் ஆட்சியில் தமிழர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்களா? என்பதை நான் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் வடக்கு மாகாணம் முன்னேற்றமடைந்துள்ளது. வடக்கில் கல்வி, தொழில் நிலை உயர்வடைந்துள்ளது. மொத்த சனத்தொகையில் 52 சதவீதமான தமிழர்கள் சிங்களவர்களுடன் நல்லிணக்கத்துடன் வாழ்கிறார்கள். இப்போது நாட்டில் என்ன இனப்பிரச்சினை உள்ளது என்பதை உயரிய சபை ஊடாகக் கேட்கிறேன்.

அதிகாரப் பகிர்வுக்காக ஜனாதிபதி சந்தித்து இல்லாத பிரச்சினைகளை தோற்றுவிப்பதை தமிழ் அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தமிழ் அரசியல்வாதிகள் பொய்யுரைப்பதற்கு அச்சமடைந்ததில்லை, சிங்கள அரசியல்வாதிகள் உண்மையைக் கூறுவதற்கு அச்சமடைந்தார்கள். இதுவே இன்றை பிரச்சினைக்கு மூல காரணியாக உள்ளது. ஆகவே, தமிழ் அரசியல்வாதிகளின் பொய்யை சர்வதேசம் தமது பூகோள அரசியலுக்காக ஏற்றுக்கொண்டது.

இலங்கை ஒற்றையாட்சி நாடு. ஆகவே, இலங்கையில் சமஷ்டியாட்சி முறைமையிலான கட்டமைப்பைத் தோற்றுவிக்குமாறு தமிழ் தரப்பினர் குறிப்பிடுகின்றமை நகைப்புக்குரியது.

எக்காரணிகளுக்காகவும் அதிகாரப் பகிர்வுக்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம் என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக் கொள்கிறேன். - என்றார். (05)

# நால்வர் தீர்மானங்களால் நாடு வங்குரோத்தானது

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் மத்திய வங்கி எடுத்த தீர்மானங்களின் விளைவை நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ளார்கள். பொருளாதாரப் பாதிப்புக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் எவ்வாறு முன்னேற்றமடைவது.

மூன்று அல்லது நான்கு பேர் எடுத்த தவறான தீர்மானங்களால் ஒட்டு மொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே பொருளாதாரப் பாதிப்புக்கு நீதி வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உத்தேச மத்திய வங்கி சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

உத்தேச மத்திய வங்கி சட்டமூலத்தின் ஒருசில ஏற்பாடுகள் பாரதுரமானவை. ஆகவே, சட்டமூலம் தொடர்பில் விரிவான பேச்சு முன்னெடுக்கப்பட வேண்டும். பொருளாதாரப் பாதிப்புக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகள் பொறுப்புக் கூற வேண்டும் என ஒரு தரப்பினரும், அரச அதிகாரிகள் பொறுப்புக்கூறவேண்டும் என பிறிதொரு தரப்பினரும் குறிப்பிடுகிறார்கள்.

நிதி வங்குரோத்து தொடர்பில் தற்போது மாறுபட்ட பல கருத்துகள் குறிப்பிடப்படுகின்றன. நாட்டின் நிதி நிலைமை ஸ்திரத்தன்மையில் இல்லை. ஆகவே அரசமுறை கடன்கள் மறுசீரமைக்கப்படவேண்டும் என்ற யோசனையை 2016 ஆம் ஆண்டு அமைச்சரவையில் முன்வைத்தேன். 4 சதவீதமாகக் காணப்பட்ட வணிக கடன் 45 சதவீதமாக உயர்வடைந்துள்ளதால் நாடு வங்குரோத்து நிலையடையும் என்பதை அப்போது சுட்டிக்காட்டினேன்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பொருளாதார வளர்ச்சி வீதம் 3 சதவீதமாகக் காணப்பட்டது. வணிக கடன் 12.5 சதவீதமாக உயர்வடைந்தது. அதனால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்று குறிப்பிடுவது பொருளாதார ரீதியில் ஏற்புடையதல்ல.

2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்தால் 2020 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் 350 பில்லியன் ரூபாவை அரசாங்கம் இழக்க நேரிடும். ஒவ்வொரு பிரஜையும் ஏதாவதொரு வழிமுறையில் 350,000 ரூபாவை இழப்பார்கள் இதுவே உண்மை.

நல்லாட்சி அரசாங்கம் பெற்றுக்கொண்ட வணிகக் கடன்களில் 7.2 பில்லியன் டொலர் 2019 ஆம் ஆண்டு மிகுதியானது. ரூபாவின் பெறுமதியை 198 ரூபாவாகத் தக்கவைத்துக் கொள்ள மத்திய வங்கி 5.5 பில்லியன் டொலரை செலவழித்தார்கள். மத்திய வங்கி தனது பொறுப்பை நிறைவேற்றுவதற்காக எடுத்த தீர்மானத்தின் விளைவை நாட்டு மக்கள் இன்று எதிர்கொள்கிறார்கள்.

வைத்தியசாலைகளில் பலர் உயிரிழக்கிறார்கள். மந்த போசனை தீவிரமடைந்துள்ளது. எதிர்காலத்தில் அறிவற்ற மனித சமுதாயம் தோற்றம் பெறும். இவ்வாறான நிலையில் எதிர்வரும் தசாப்தங்களுக்கு எவருக்கும் எதிர்காலம் என்பதொன்று கிடையாது. இதற்கு கடந்த அரசாங்கத்தின் மத்திய வங்கியை இயக்கியவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

2020.03.07 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியம் 'இலங்கையின் கடன் நிலை ஸ்திரமான நிலையில் இல்லை. ஆகவே வெகுவிரைவில் நாடு வங்குரோத்து நிலையடையும்' என மத்திய வங்கி ஆளுநர், நாணய சபை மற்றும் அப்போதைய ஜனாதிபதிக்கும் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. ஆனால் இந்த விடயத்தை மறைத்து அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வந்து போலி கதைகளை மாத்திரம் குறிப்பிட்டு முழு நாடாளுமன்றத்தையும் தவறான வழி நடத்தினார்கள்.

தேவையான அளவு டொலர் உள்ளது. எரிபொருள் உள்ளது. மருந்து உள்ளது என்றார்கள். இறுதியில் நேர்த்தில் நடந்ததை முழு நாடும் அறிந்தது. பொறுப்பில் உள்ளவர்கள் பொறுப்புக் கூறாமல் இருந்தால் இன்னும் 10 வருடங்களுக்கு பின்னர் நாடு மீண்டும் வங்குரோத்து நிலை அடையும். வங்குரோத்து நிலையடைந்த ஆஜன்டினா இதுவரை முன்னேறவில்லை.

12 ஆண்டுகளுக்கு பின்னர் கிறீஸ் தற்போது முன்னேற்றமடைந்துள்ளது. லெபனான் சற்று முன்னேற்றமடைந்துள்ளது.

வங்குரோத்து நிலை அடைந்த ஐஸ்லாந்து நாடு குறுகிய காலத்துக்குள் முன்னேற்றமடைந்துள்ளது. நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய பிரதான மூன்று வங்கிகளின் ஆளுநர்களை சிறைக்கு அனுப்பி ஐஸ்லாந்து வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டெழும் செயற்பாடுகளை ஆரம்பித்தது.

இருப்பினும் இலங்கையில் பல லட்ச மக்களை மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிய மத்திய வங்கியின் ஆளுநர், நாணய, முன்னாள் நிதியமைச்சர், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் ஆகியோருக்கு எவ்வித பொறுப்புக்கூறலும் இல்லை, அவர்கள் மீதான அழுத்தம் ஏதும் இல்லை.

மூன்று, நான்கு பேர் சேர்ந்து எடுத்த தீர்மானங்களால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, பொருளாதார பாதிப்புக்கான நியாயம் வேண்டும். ஒருசிலர் எடுத்த தீர்மானங்களால் 225 உறுப்பினர்களும், அரச அதிகாரிகளும் விமர்சனத்துக்குள்ளாக வேண்டிய தேவையில்லை. இந்த சட்டமூலத்தில் வரையறையற்ற நாணய அச்சிடலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# மத்திய வங்கி சட்டமூலம் மக்களாணைக்கு முரணன்

## அநுரகுமார தெரிவிப்பு

வங்குரோத்து நிலையில் இருந்து மீள வேண்டுமாயின் திறைசேரியும், மத்தியவங்கியும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். பொருளாதாரத்தை இயக்கும் முழு அதிகாரத்தையும் மத்திய வங்கிக்குப் பொறுப்பாக்கினால் நிதிக் கொள்கை வகுப்பில் இருந்து மக்களாணை நீக்கப்படும். மத்திய வங்கிச் சட்டமூலத்தில் நிறைவேற்றுத்துறையும், சட்டவாக்கத்துறையும் நீக்கப்பட்டுள்ளமை மக்களாணைக்கு முரணானது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உத்தேச மத்திய வங்கிச் சட்டமூலம் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதாரப் பாதிப்பு தொடர்பில் அனைவரும் உரையாற்றுகிறார்கள். ஆனால் பொருளாதாரப் பாதிப்பை தோற்றுவித்தவர்கள் தலைமறைவாகியுள்ளார்கள். பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அனைவரும் அரசாங்கத்தில் முன்னிலை வகிக்கிறார்கள். 2022 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாகவும், 2023 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 11.5 சதவீதமாகவும் உயர்வடைந்துள்ளது.

கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு ஏற்றுமதி 23 சதவீதத்தால் குறைவடைந்துள் ளது. மறுபுறம் முதல் காலாண்டில் கிடைக்கப் பெற்ற 820 பில்லியன் ரூபா தேசிய வருமானத்தில் 818 பில்லியன் ரூபா அரச முறை கடன்களுக்கான வட்டி செலுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்திடம் 2 பில்லியன் ரூபா மாத்திரமே மிகுதியாகியுள்ளது. ஆகவே பாரிய நிதி நெருக்கடியில் நாடு உள்ளது. பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு திறைசேரியும், மத்திய வங்கியும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நிதி வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் நிதி தொடர்பான அதிகாரங்களை மத்திய வங்கிக்கு முழுமையாக பொறுப்பாக்குவது முறையற்றது.

தேர்தல் விவகாரத்தில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவையும், அரச நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகளில் அரசசேவைகள் ஆணைக்குழுவையும், இலஞ்ச ஊழல் தொடர்பான பிரச்சினைகளில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவையும் சுயாதீனமாக்க முடியும். ஆனால் நிதி விவகார கொள்கையை அரசாங்கத்தால் சுயாதீனப்படுத்த முடியுமா ?

நிதி சுயாதீனத்தன்மை பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தும் சகல விடயங்களுடன் தொடர்புபட்டுள்ளது. ஆகவே, முழு பொருளாதாரத்தையும் இயக்கும் அதிகாரத்தை மத்திய வங்கிக்கு வழங்க முடியுமா? கடந்த காலங்களில் மத்திய வங்கியில் பல நிதி முறைகேடுகள் இடம்பெற்றன. மத்திய வங்கி மோசடியாளரான ரணிலை விரட்ட ஆணை தாருங்கள் என தற்போதைய ஆளும் தரப்பினர் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக் களிடம் கோரினார்கள். இந்த சட்டமூலம் அவ்வாறான எதிர்ப்புகளுக்கும், மக்களின் அபிலாஷைகளுக்கும் உட்படாது. ஆகவே பொருளாதாரம், நிதி கொள்கை தொடர்பில் தீர்மானம் எடுக்க மக்களாணையுடன் அரசாங்கத்தை தோற்றுவிக்க வேண்டும். மக்களுக்கு வழங்கி வாக்குறுதிக்கு அமைய அரசாங்கம் வழங்கப்பட்ட பதவி காலத்துக்குள் நாட்டை நிர்வகிக்க முடியும். மக்களாணைக்கு முரணாக ஆட்சி செய்ய முடியாது. ஆகவே மாற்ற வேண்டியது சட்டத்தை அல்ல முறைகேடாக செயற்படும் ஆட்சியாளர்களை என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். மத்திய வங்கியின் சுயாதீனம் பற்றி பேசுகிறார்கள். உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது என அறிந்தும் மத்திய வங்கி இருப்பில் இருந்த தங்கத்தை விற்றது இதுவா சுயாதீனம், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட கிரீஸ் நாட்டுடன் பிணைமுறிகள் விநியோகிக்கப்பட்டன இதுவா சுயாதீனம், மத்திய வங்கியின் முக்கிய தரப்பினர் ஊழல் மோசடியுடன் தொடர்புகொண்டுள்ளமை காலம் காலமாக வெளிப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கம் மாத்திரம் ஊழல் அல்ல, இங்கும் ஊழலே காணப்படுகிறது. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக சிவப்பு பிடியாணை (எச்சரிக்கை) விடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த பிடியாணையை நீக்கி விட்டாரா ? என்பதை அறியமுடியவில்லை.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, ஊழல் விவகாரத்தில் மத்திய வங்கியும் பொறுப்புக்கூறும் நிலையில் உள்ளது.

நுண்நிதி கடன்களை மத்திய வங்கி கண்காணித்ததா? வடக்கு மாகாணத்தில் நுண்கடன் பெற்றுக்கொண்டவர்களில் பெரும்பாலானோர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். கடந்த காலங்களில் பல நிதி நிறுவனங்கள் மூடப்பட்டன. வைப்பாளர்கள் தற்கொலை செய்துக் கொண்டார்கள். மத்திய வங்கி தனது பொறுப்பை நிறைவேற்றியதா இல்லை?

உத்தேச மத்திய வங்கி சட்டமூலத்தில் இருந்து நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறை நீக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி யாருக்கும் பொறுப்புக் கூற வேண்டிய தேவை இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. நிதி தொடர்பான ஆலோசனைகளை சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

உத்தேச மத்திய வங்கி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மக்களால் தெரிவுசெய்யப்படும் அரசாங்கத்தால் நிதி தொடர்பான கொள்கைகளை வகுக்க முடியாது. முழு பொருளாதாரத்தையும் இயக்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கு பொறுப்பாக்கப்படும். நிதி தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மக்களுக்கு இல்லை என்றால் மக்களாணை கோருவது பயனற்றது. ஆகவே பொருளாதார ரீதி யில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் திறைசேரியும், மத்திய வங்கியும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். மத்திய வங்கியால் மாத்திரம் தனித்துசெயற்பட்டு முன்னேற முடியாது. - என்றார். (05)





# கிழக்கு ஆளுநரின் தலைமையில் மாகாண பாதுகாப்புசபை கூட்டம்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் கிழக்கு மாகாண பாதுகாப்பு சபைக் கூட்டம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் சட்டம், ஒழுங்கு, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு, சட்ட விரோத போதைப்பொருள் விநியோகம், சட்டவிரோதமாக மீன்பிடித்தல், சுற்றுச்சூழலுக்கு எதிரான செயற்பாடு, மனித கடத்தல், மான் பூங்காக்கள் மீதான கண்காணிப்பு, கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிழக்கு மாகாண இராணுவத்தளபதி, கிழக்கு மாகாணத்தின் கடற்படை ரியர் அட்மிரல், கிழக்கு மாகாணத்தின் விமானப்படை தளபதி ஆகியோர் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

### அமைச்சர் கெஹலியவுக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி கையொப்பம்

பொறுப்பற்ற முறையில் தரமற்ற மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை இறக்குமதி செய்து, சுகாதாரத் துறையை நலிவடையச் செய்து உயிரிழப்புகள் ஏற்படுதலுக்கு காரணமாக அமைதல் என்பனவற்றைக்காரணமாக் கொண்டு சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெல்லவுக்கு எதிராக நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தது. அண்மைய காலங்களில், தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்துஅவற்றைப்பயன்படுத்தியதால் எமது நாட்டின் வைத்தியசாலை கட்டமைப்பில் அதிக எண்ணிக்கையிலான



இறப்புகள் நிகழ்ந்தன.

இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியினர் தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு அறிவுறுத்திய போதிலும், அதைப் பொருட்படுத்தாது அவசர நிலை எனக் கருதி கொள்முதல் மற்றும் பதிவு செயல்முறைக்கு புறம்பாக மருந்துப்பொருள்கள் இறக்குமதிசெய்யப்பட்டதோடு, இதனால்நாட்டின்பலமுக்கிய வைத்தியசாலைகளில் உயிரிழப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன. இந்த உண்மைகளைவைத்துநம்பிக்கையில்லாப் பிரேரணை கைச்சாத்திடப்படுகிறது என்றும், மக்களது வாக்குகளின் மூலம் நாடாளுமன்றத்திற்கு வந்த ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு முதுகெலும்பு இருந்தால் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் கையொப்பமிட வேண்டும் என இது தொடர்பில்கருத்துதெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அதேபோல், ஒரு நாட்டின் சுகாதாரம் என்பது மக்களின் வாழ்க்கை என்றும், சுகாதார சீர்கேடு மக்களின் இயல்பு வாழ்க்கை சீர்குலைவதற்கு ஒரு காரணம் என்றும் எதிர்க்கட்சித்தலைவர்மேலும் தெரிவித்தார். (05)

## டெலிகொம் தலைவர் பதவி நீக்கப்பட்டார்

ஸ்ரீலங்காரெலிகொம்தலைவர்ரொஹான்பெர்னாண்டோ அந்த பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, ரெலிகொம் பணிப்பாளர் சபை தன்னை தலைவர் பதவியில் இருந்து நீக்கியுள்ளதாக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (05)




## ஜனாதிபதி தன்னுடைய விருப்பத்துக்கேற்ப மத்திய வங்கி ஆளுநரை நியமிக்கமுடியாது

### இப்படிக் கூறுகிறார் அமைச்சர் ஷெகான்

உத்தேச மத்திய வங்கி சட்டமூலத்துக்கு அமைய ஜனாதிபதியின் விருப்பத்துக்கு அமைய மத்திய வங்கியின் ஆளுநரை நியமிக்க முடியாது.

மத்திய வங்கியின் சுயாதீனத்தை பாதுகாக்க விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மத்திய வங்கியின் உயர் பதவிகள் தொடர்பில்நாடாளுமன்றமே தீர்மானிக்கும் என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உத்தேச மத்திய வங்கி சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பொருளாதார மீட்சிக்காக பல திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் ஒத்துழைப்பை தொடர்ந்து புதிய மத்திய வங்கி சட்டமூலம்தயாரிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தேச மத்தியவங்கிசட்டமூலத்தை ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினார்கள்.

சட்டமூல வரைவு தொடர்பில் உயர்நீதிமன்றம் பல திருத்தங்களை முன்னெடுத்துள்ளது. உயர்நீதிமன்றத்தின் திருத்தங்களை பரிசீலனை செய்து வரைவுக்குள் உள்ளடக்கியுள்ளோம்.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்கள் அனைத்துக்கும் எதிராக நின்றவர்கள் இதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

இந்த சட்டமூலத்தால் மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை பாதிக்கப்படும் என எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றசாட்டுக்கள் அடிப்படையற்றவை. எதிர்ப்பு தெரிவிப்பதற்காக மாத்திரம் எதிர்க்கிறார்கள்.

உத்தேச மத்திய வங்கி சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மத்திய வங்கியின் ஆளுநரை ஜனாதிபதியால் தனித்து நியமிக்க முடியாது.

நாடாளுமன்றத்தின் அரசமைப்பு பேரவை ஊடாகவே ஆளுநர் நியமிக்கப்பட வேண்டும். மறுபுறம் மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகள் நியமனம் நாடாளுமன்றத்தின் ஊடாக நியமிக்கப்பட வேண்டும்.

மத்தியவங்கியின்உயர் பதவிகளை நாடாளுமன்றமேதீர்மானிக்கும். ஆகவே மத்திய வங்கியின் சுயாதீன தன்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

அரசியல் தலையீடுகள் இல்லாமல்சிறந்தமுறையில் செயற்படும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கடந்த 70 ஆண்டு காலமாக மத்திய வங்கி சட்டம் திருத்தியமைக்கப்படவில்லை.

ஆகவே காலத்துக்கு அமைய சட்டத்தை மாற்றியமைக்க எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்றார்.

## மதுரை - யாழ்ப்பாணம் விமான சேவை விரைவில்

மதுரைமற்றும்யாழ்ப்பாணத்துக்கு இடையில் விரைவில் விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்காக இந்தியாவிலுள்ள தனியார் விமான சேவை நிறுவனங்களுடன் இலங்கையின் விமானப் போக்குவரத்துஅமைச்சுபேச்சு நடத்தி வருவதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த விமான சேவையை வாரத்திற்கு 7 நாள்களும்முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுரைமற்றும்கொழும்பு இடையேயான முதலாவது சர்வதேச விமான சேவை 2012ஆம்ஆண்டுசெப்ரெம்பர் மாதத்தில்ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது மதுரையிலிருந்து நாளாந்தம் கொழும்பிற்கான நேரடி விமானசேவையைஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## சிறுவன்மீது துஷ்பிரயோகம் வவுனியாவில் ஒருவர் கைது

பதினைந்து வயது சிறுவன் ஒருவனை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படும் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தின் மாவட்ட சமூக பொலிஸ்பிரிவின்அபிவிருத்தி உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், தாம் கடமைபுரியும் வவுனியா மாவட்ட சமூக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை நிகழ்வுகளில் மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றுபவர் எனவும், குறித்த நபர் நகர்ப்புறத்தை அண்டிய பாடசாலை மாணவன் ஒருவனையே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சிறுவன் வவுனியா போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

வவுனியா, குருமன்காடு பகுதியை சேர்ந்த 15 வயதான சிறுவனேதுஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தபட்டுள்ளதுடன்,

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் ஈச்சங்குளம் பகுதியை சேர்ந்த 33 வயதான ஒருவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

## சமுர்த்தி உதவித் திட்டம் நிறுத்தப்படவேமாட்டாது

### அமைச்சர் பிரசன்ன திட்டவட்டக் கருத்து

ஆய்வின் அடிப்படை யில் திட்டமிடப்பட்ட சமுர்த்தி வேலைத் திட்டத்தை பலவீனப்படுத்தவும் இடை நிறுத்தவும் அரசாங்கம் செயற்படாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி திட டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு சமுர்த்தி அதிகாரிகளின் ஆதரவு பெருமளவில் கிடைத்து வருவதாக அமைச்சர் மேலும் கூறினார்.

2022-2024 ஆம் கல்வியாண்டுகளுக்கான கல்விப்பொதுச்சான்றிதழ்களின் உயர்தரப் பரீட்சைக்கு பயிலும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் கலந்துகொண்டார்.

அங்கு சமுர்த்தி பயனாளி குடும்பங்களைச் சேர்ந்த 192 மாணவர்களுக்கு மாதாந்தம் 1500 ரூபா புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக் கையில் –

நாட்டில் வறுமையை ஒழிப்பதற்காக திருமதி சந்திரிகாவின்காலத்தில்சமுர்த்திதிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பிறகு ஆட்சிக்குவந்த ஒவ்வொரு அரசும் சமுர்த்திதிட்டத்தை மிக வலுவாக தொடர்ந்தது.

சமுர்த்தி திட்டத்தின் ஒரே நோக்கம் மக்களை சேமிப்பதை ஊக்குவிப்பதும், புதிய நிரந்தர வருமானத்தை உருவாக்குவதும், குறிப்பாக சுயதொழிலை உருவாக்குவதும், ஏழைகளை தனித்து நிற்க ஊக்குவிப்பதும் ஆகும். ஆட்சிக்குவந்த ஒவ்வொரு அரசும் இலவச சுகாதாரம், இலவசக்கல்வி, சமுர்த்திவேலைத் திட்டம்என்றுஏராளமானபணத்தைச் செலவிடுகின்றன.

தற்போது சமுர்த்தி திட்டம் வங்கி அமைப்பாக வளர்ந்துள்ளது. சமுர்த்தி திட்டம் தற்போது வளமான குடும்பங்களின் வாழ்க்கையை மேம் படுத்துவதற்கும் அந்தக் குடும்பங்களின் மாணவர்களின் கல்விக்கும் பெரும் பங்களிப்பைவழங்கிவருகின்றது. இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான எனது அரசியல் வாழ்க்கையில், மேல் மாகாண முதலமைச்சராகஇருந்த காலத்தில்கல்வி மற்றும்சமுர்த்தி அபிவிருத்திஅமைச்சர்பதவிகளை வகித்துள்ளேன். அந்த இரண்டு அமைச்சுக்களும் நான் மிகவும் விரும்பிய இரண்டாகும். சமுர்த்தி திட்டம் மிகவும் விஞ்ஞான ரீதியாக திட்ட மிடப்பட்ட வேலைத் திட்டமாகும். எனவே, சமுர்த்தி திட்டத்தை வலுவிழக்கச் செய்யவும், குழிபறிக்கவும் அரசாங்கம் செயற்படவில்லை. மக்கள் கனவில் கூட அப்படி நினைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

சமுர்த்தி திட்டத்தை மக்களுடன் நெருங்கிச் செல்ல, வேலைத்திட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்கு பெருமளவு ஆதரவு கிடைத்து வருகிறது. சமுர்த்தி உத்தியோ கத்தர்களின் ஆதரவைஎமக்குகிடைக்காவிடின் இந்த வேலைத் திட்டத்தை இவ்வளவு வெற்றிகரமாக செயற்படுத்த முடியாது. சமுர்த்தி திட்டத்தை மிகவும் மேம்பட்ட மற்றும் வலுவான சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் உழைத்து வருகிறோம். அந்தப் பயணத்தில் பல்வேறு சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

நாடு ஏற்கனவே பொருளாதார சவால்களை சந்தித்து வருகிறது.

ஆனால் அரசு செழிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகளை குறைக்கத் தயாராக இல்லை. சமுர்த்தி திட்டத்தால் பெருந்தொகையான மக்கள் நிம்மதியாகவாழ்ந்துவருகின்றனர். சவால்களை எதிர்கொள்ளவும், மக்களின் வாழ்வுக்கு மேலும் பலத்தை அளித்து சமுர்த்தி திட்டத்தை தொடரவும் அரசாங்கம் செயற்பட்டுவருவதாகவும்அமைச்சர் குறிப்பிட்டார். (05)





## தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு தொடர்பான விருந்தினர் விரிவுரை

இலங்கைதென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானங்கள் துறையின் வரலாற்றுப்பிரிவுதென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு தொடர்பான விருந்தினர் விரிவுரை கலை கலாசார பீடத்தின் கலை அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலை கலாசார பீடத்தின் அனைத்துத் துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் பிரதம அதிதியாக பங்கேற்றதுடன், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் பீடத்தின் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்;. வரலாற்றுப் பிரிவின்சிரேஷ்ட விரிவுரையாளரும்சமூகவிஞ்ஞானங்கள் துறையின்முன்னாள்துறைத் தலைவருமான கலாநிதி அநூஷியா சேனாதிராஜா வரவேற்புரையை வழங்கினார். தொடர்ந்து கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் நிகழ்வு தொடர்பான அறிமுகத்தையும்கருத்தாடல் சம்பந்தமான புலமைசார் ஆரம்பத்தையும் எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் பிரதம அதிதி உரையை நிகழ்த்தினார். மேலும் பல்கலைக்கழகங்களில் இவ்வாறான கல்வி மற்றும் ஆய்வு ரீதியான கருத்தாடல்கள், விரிவுரைகளின் அவசியத்தை சுட்டிக்காட்டியதுடன் உலக நாடுகளின் அனுபவங்களையும்பகிர்ந்துகொண்டார்.

தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக் கங்களின் அறிவுசார் வரலாறுதொடர்பானவிருந்தினர் விரிவுரை பிரதான நிகழ்வாக இடம்பெற்றது. இந்நிகழ்வின் வளவாளராக இந்தியாவின் மொஹாலி பஞ்சாப்பின்அறிவியல்கல்வி மற்றும்ஆராய்ச்சிக்கான இந்திய நிறுவனத்திலிருந்து மனிதநேய மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறையின் தலைவரும் இணைப் பேராசிரியருமான கலாநிதி வி. ராஜேஷ் விரிவுரையை ஆய்வுக் கண்ணோட்டத்தில் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் ஏறத்தாழ 200இற்கு மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர்.

இந்தியாவின்முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் வரலாற்றை ஆய்வு ரீதியில் முன்வைத்த வளவாளர், இலங்கையின் முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் சம்பந்தமான தேடலின் அவசியத்தையும் எடுத்துரைத்தமை சிறப்பிற்குரியது. இந்நிகழ்வை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர் இணைந்துமுன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் வரலாறு தொடர்பான அறிவைப் பெறும் வகையில் வினா, விடைக்கான நேரம் ஒதுக்கப்பட்டதுடன் மாணவர்கள் அதிகளவான பயன்களைப் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ரயில் சேவையை அதிகார சபையாக ஆக்கினால்தான் ஓரளவுக்கு நாடு முன்னேற்றமடையும் வாய்ப்புள்ளது

## போக்குவரத்து அமைச்சர் கூறுகிறார்

ரயில் சேவையை திணைக்களம் என்ற அடிப்படையில்வைத்துக்கொண்டு ரயில் சேவையை நவீனமயப்படுத்த முடியாது. மாற்றம் வேண்டுமாயின் ரயில் சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்க வேண்டும்.

நட்டத்தில் இயங்கும் ரயில் திணைக்களம் வெகுவிரைவில் அதிகார சபையாக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க வாய்மூல விடைக்கான வினாக்களின் போது எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

நாட்டில் 168 பிரதான புகையிரத நிலையங்களும், 147 உப ரயில் நிலையங்களும், 69 ரயில் நிறுத்தும் நிலையங்களும் உள்ளன. ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கொம்பனிவீதி ரயில் நிலையத்தை ஜோன் கீல்ஸ் நிறுவனம், களனி ரயில் நிலையத்தை பவஎன்றநிறுவனம், ராகமை, கண்டி, நம்புக்கனை, அநுராதபுரம், நாவலபிட்டி ஆகிய ரயில் நிலையங்களை பய்னோ என்ற நிறுவனம், தெமட்டகொட ரயில் நிலையத்தை தந்திரி என்ற நிறுவனம், யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை இலங்கை வங்கி அபிவிருத்தி செய்கின்றன.

ரயில் நிலையங்களின் சொத்து மற்றும் காணி தொடர்பில் மும்மொழிகளிலும் பெறுமை விளம்பரத்தைக் கோரியிருந்தோம். இதற்கமைய பல்வேறு முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ரயில்திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றைப் பயனுடையதாக்குவதற்குவிசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைய எதிர்வரும் நாள்களில் அமைச்சரவை ஊடாக சிறந்த தீர்மானம் எடுக்கப்படும்.

ரயில் நிலையங்களை அண்மித்துள்ள இரண்டு கிலோமீற்றர்தூரத்துக்குட்பட்டு ரயில் காணிகளில் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புக்கள், வரி சேகரித்தல் தொடர்பாகக் கவனம் செலுத்தும்பொறுப்பை ரயில்நிலைய அதிபர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. வரி சேகரிப்பின் 15 சதவீதத்தை ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியர்கள் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் ஒரே காலப்பகுதியில் தான் ரயில் சேவையை அறிமுகப்படுத்தினார்கள்.

ரயில் சேவையில் இந்தியா பன்மடங்கு முன்னேற்றமடைந்துள்ளது. ஆனால், இலங்கை பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இருந்ததை காட்டிலும்பின்னடைந்து,ரயில் திணைக்களம் நிதி நிலையில் நட்டமடைந்துள்ளது.

ரயில் சேவையைத் திணைக்களம் என்ற அடிப்படையில் தொடர்ந்து முன்கொண்டு செல்ல முடியாது. மாற்றம்தேவையாயின் ரயில் திணைக்களத்தை அதிகாரசபையாகமாற்றியமைக்க வேண்டும். வெகுவிரைவில் ரயில் சேவை அதிகார சபையாக மாற்றியமைக்கப்படும். ரயில்சேவைகளும்டிஜிற்றல்மயப்படுத்தப்படும். - என்றார். (05)

# சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில்தான் குருந்தூரில் சைவ வழிபாடுகள் தடுக்கப்பட்டன

## பொலிஸார் இப்படிக் கூறுகின்றனர்

சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கிலேதான் குருந்தூர்மலையில் கடந்த 14 ஆம் திகதி சைவத்தமிழ் மக்களின் வழிபாடுகள் தடுக்கப்பட்டன என முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

இந் நிலையில் தொல்லியல் திணைக்களத்தின் விளக்கத்தைப்பெறுவதற்காக குறித்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 08ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

கடந்த 14ஆம் திகதி முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் பொங்கல்வழிபாடுகளைமேற்கொள்ளச் சென்ற சைவத் தமிழ் மக்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக கடந்த 13.07.2023 அன்று, முல்லைத்தீவு பொலிஸாரால் குருந்தூர் மலை தொடர்பான வழக்கு நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றிலே எடுத்துக்கொள்ளப்பட்டு, மறுநாளான 14.07.2023 குருந்தூர்மலையில் இடம்பெற இருக்கின்ற சைவத் தமிழ் மக்களின் பொங்கல் வழிபாடுகளைத் தடுக்குமாறு நீதிமன்றைக் கோரியிருந்தனர்.

இருப்பினும் பொலிஸாரின் இந்தக் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

இந் நிலையில் கடந்த 14.07.2023ஆம் திகதி குருந்தூர்மலையில், சைவத் தமிழ் மக்களின் பொங்கல் வழிபாடுகள், பொலிஸாராலும் அங்கு குழுமியிருந்த பௌத்த தேரர்களாலும், பெரும்பாண்மையின மக்களாலும் தடுக்கப்பட்டன.

இவ்வாறு சைவ வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமை தொடர்பில் கடந்த 14.07.2023 அன்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்களான இரத்தினம் ஜெகதீசன், அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து கடந்த 17.07.2023 அன்று சைவவழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமைதொடர்பில்மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றிலே ஏ.ஆர்.673/18 என்ற குருந்தூர்மலை வழக்கு நகர்த்தல் பத்திரம் நீதி மன்றிலே விசாரணைக்காகவும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கிலே ஆலய அடியவர்கள் சார்பாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்களான இரத்தினம் ஜெகதீசன், அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் மன்றில் தோன்றியிருந்தனர்.

அந்தவகையில், சைவத் தமிழ் மக்களின் பொங்கல் வழிபாடுகள் தடைசெய்யப்பட்டமை தொடர்பிலான புகைப்படங்கள், மனித உரிமை ஆணைக்குழு மற்று, பொலிஸ்நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் என்பவற்றை நீதிமன்றில் சமர்ப்பித்து, குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய அடியவர்கள் சார்பில் மன்றில் தோன்றிய சட்டத்தரணிகள் மன்றில் தமது சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தனர்.

இந் நிலையில் இது தொடர்பில் விளங்கமளிப்பதற்காக நீதிமன்றிலே தோன்றியிருந்த பொலிஸார், தாம் சமாதானப் படுத்தும் நோக்கிலேதான் பொங்கல் வழிபாட்டைத் தடுத்ததாகக் கூறியிருந்தார்கள்.

இதுதொடர்பானமேலதிக விசாரணைகளை, மேலதிக தகவல்களைத் தொல்லியல் திணைக்களத் திடமிருந்தும் பெறவேண்டியதொரு தேவையிருப்பதால், குறித்த நாளில் குருந்தூர்மலையில் இடம்பெற்ற விடயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொல்லியல் திணைக்களத்திற்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் தொல்லியல் திணைக்களத்தின் அறிக்கைக்காக எதிர்வரும் ஓகஸ்ட் பாதம் 08 ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# களுத்துறை போதனாவில் சத்திரசிகிச்சை நிறுத்தம்

## மருந்து தட்டுப்பாட்டுக்கு உடன் தீர்வுகாண்க

களுத்துறை போதனா வைத்தியசாலையில் சிசேரியன் மருந்து இல்லாத காரணத்தால் சிசேரியன்சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இது பாரதூரமான பிரச்சினையாகும். இலவச சுகாதார சேவையின் தற்போதைய பிரச்சினைகள் வழமையானது,சாதாரணமானது என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டுஉணர்வற்ற வகையில் சுகாதாரத்துறை அமைச்சர் கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்.

சுகாதார சேவை யில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம்உரியநடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

நாடாளுமன்றத்தில் விசேடகூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலவச மருத்துவ துறை மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. நடைமுறையில் உள்ள பிரச்சினைகளை அரசாங்கம் அறிந்துள்ளதா என்பது சந்தேகத்துக்குரியது.

களுத்துறை போதனா வைத்தியசாலையில் சிசேரியன்சத்திரசிகிச்சைக்குத் தேவையான 'எவிமாகென்' என்ற மருந்து இல்லாத காரணத்தால் சிசேரியன் சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அவசர நிலையில் தான் சிசேரியன் சத்திரசிகிச்சை வழங்கப்படுகிறது. மருந்து தட்டுப்பாடு காரணமாக இந்த சத்திரசிகிச்சை இடைநிறுத்தப்பட்டுள்ளமை பாரதூரமானது.

நாட்டில் தாய் மற்றும் பிள்ளைகளில் மொத்த எண்ணிக்கையில் 10 லட்சம் பேர் மந்த போசணையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே,இந்தப்பிரச்சினைக்கு என்னதீர்வுஎனவினவினார்.

இதற்குஎழுந்துபதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய சிசேரியன்சத்திரசிகிச்சைக்குத் தேவை யான மருந்து தட்டுப்பாடு குறித்து உடனடியாக பதிலளிக்க முடியாது. மருந்து கொள்வனவுக்குத் தேவையான நிதியை வழங்கியுள்ளோம்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ - மருந்துகொள்வனவில் பாரிய மோசடி நிலவுகிறது.

தற்போதைய மருந்து தட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கத்திடம் கடந்த ஒன்றரை வருடத்துக்கு முன்னர் குறிப்பிட்டோம் என விசேட வைத்தியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரித்த வைத்தியர்களை அரசாங்கம் குறிப்பாக சுகாதாத்துறை அமைச்சுபுறக்கணித்துள்ளது. - என்றார்.

இதன்போது, எழுந்து உரையாற்றிய ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, சுகாதா ரத் துறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளை உணர்வுபூர்வமாக ஆராய வேண்டும்.

மருந்துகொள்வனவுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிடுகிறார். ஆனால் ஒதுக்கப்படும் நிதியை கொண்டு தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இயற்கையான முறையில் பிரசவம் நிகழாத போது சிசேரியன் முறையில் பிரசவம் பார்க்கப்படும். ஆனால்தற்போதுசிசேரியன் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவும் போது தாய் மற்றும் சேய் மரணம் நிகழும். இது பாரதூரமானது. ஆகவே அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். - என்றார்.

இதன்போது, எழுந்து உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளை உணர்வுபூர்வமாகஆராய வேண்டும்எனக் குறிப்பிடுகிறோம். ஆனால் சுகாதாரத்துறை அமைச்சர் தற்போதைய பிரச்சினைகள் சாதாரணமானவை.இதனால் தான் வைத்தியசாலைகளில் பிரேதஅறைகாணப்படுகிறது. - என்கிறார். இலவச சுகாதார சேவையில் ஏதேனும் முறைகேடுகள்காணப்படுமாயின் பாதிக்கப்படும் தரப்பினருக்கு நட்டஈடு வழங்கலாம் என்கிறார். உயிரின் பெறுமதியை அவர் எவ்வாறு மதிப்பிடுவார். ஆகவே இந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளுக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளிக்காது என்றார்.

இதன்போது, எழுந்து உரையாற்றிய முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த காலங்களில் மலேரியா, யானைக்கால் உள்ளிட்ட பல நோய்களை முழுமையாக இல்லாதொழித்து உலக சுகாதார தாபனத்தின் நன்மதிப்பை பெற்றுக் கொண்டோம்.

ஆனால் தற்போது அந்த நோய்கள் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளன. சுகாதாரத்துறையின் செயற்பாடுகள் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.- என்றார்.

இதன்போது, எழுந்து உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ இலவச சுகாதார சேவையின் முறைகேடுகள் தனியார் சுகாதார சேவைக்கு வலுசேர்ப்பதாக காணப்படுகிறது.

மக்கள்எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குஅரசாங்கம் தீர்வு வழங்கவில்லை. மாறாக தீர்வு வழங்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு காலத்தை கடத்துகிறது. - என்றார். (05)









# மன்னம்பிட்டி விபத்தில் இறந்தோருக்கு நிதியுதவி

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 வறிய மாணவர்களுக்கு 'கற்றலுக்கு வறுமை தடை அல்ல' என்ற அடிப்படையில் ஊக்குவிப்பு உதவித்தொகை வழங்கி வைக்கப்பட்டதுடன் அண்மையில் பொலன்னறுவை மாவட்டத்தின் மன்னம்பிட்டி கொட்டலீ பாலத்தில் இடம்பெற்ற தனியார் பஸ் விபத்தில் மரணம் அடைந்த மற்றும் பாதிப்படைந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வழங்கி வைக்கும் நிகழ்வு ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் ஊகவியலாளர் எம்.ரீ.எம். பாரிஸ் தலைமையில் ஓட்டமாவடி பிரதேச சபை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்குறித்த உதவிகள் யாவும் தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் கொடைவள்ளல் வாமதேவன் தியாகேந்திரனின் சொந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்டதுடன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண இராணுவக் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ன விஜயசேகர கலந்துகொண்டார்.

மேலும் இந் நிகழ்வின் அதிதிகளாக 23 ஆவது படைத் தலைமையகத்தின் கட்டளைத்தளபதி பிரிகெடியர் நிலந்தபிரேமரத்தின, வாகரை 233 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி கேணல் கமல் டி சில்வா, 232 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கேணல் அசித்த புஷ்பகுமார, ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஏ.எம்.நௌபர், ஓட்டமாவடி உதவிப்பிரதேச செயலாளர் எஸ்.எம். அல் - அமீன், கோறளைப்பற்று மேற்கு கோட்டக்கல்வி அதிகாரி வீ.ரீ.அஜ்மிர், ஓட்டமாவடி பிரதேசசபையின்செயலாளர் எஸ்.எம். சிஹாப்தீன் மற்றும் இலங்கை மனித உரிமைஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய இணைப்பாளர் இஸ்ஸத்தீன், வாழைச்சேனை, கல்குடா பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிகளான லசந்த பண்டார, சந்திரகுமார மற்றும் ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவர் எம்.ஏ.சீ.நியாஸ் ஹாஜி உள்ளிட்ட பாடசாலை அதிபர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த வேலை திட்டத்தின் மூலம் பல்லின மாணவ சமூகத்தை ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைப்பதன் ஊடாக நல்லிணக்க செயற்பாடுகளை ஊக்குவித்தல் நாட்டின் நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் நோக்கி பயணிக்க முடியும் என ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் பணிப்பாளர் ஊடகவியலாளர் எம்.ரீ.எம். பாரிஸ் குறிப்பிட்டார்.

இந்தஅடிப்படையிலேயே யாழ்ப்பாணத்தை சேர்ந்த தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் சொந்த நிதியின் மூலம் இம் மாணவர்களுக்கான மாதாந்த உதவித்தொகைகள் அவர்களின் கற்றல் காலம் முடியும் வரை வழங்கி வைக்கப்படவுள்ளது.

தொடர்ந்தும் அவர் இவ்வாறான மனிதாபிமான பணிகளைமேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக தியாகி அறக்கொடை நிதியத்தின் இணைப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம். பாரிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பௌத்த ஆலயத்தை அழிக்க முயன்றவர்களைச் சந்தித்த கனடா தூதரை ஏற்கமுடியாதவராக அறிவிக்கவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர காட்டம்



குருந்தூர் மலை பௌத்த ஆலயத்தை அழிக்க முயன்றவர்களை சந்தித்த கனடா உயர்ஸ்தானிகரை இலங்கையால்ஏற்றுக்கொள்ள முடியாத நபராக அறிவிக்கவேண்டும் என சரத்வீரசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்

தனது ருவிட்டர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கனடா உயர்ஸ்தானிகர் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டு குருந்தூர் மலையில் இனமோதலை உருவாக்க முயன்ற தமிழ் அரசியல்வாதி ரவிகரன் மற்றும் தமிழ்மக்களை சந்தித்துள்ளார் என சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

2000 வருடத்துக்கு மேற்பட்ட பௌத்த ஆலயத்தை அவர்கள்அழிக்கமுயன்றனர். அவர்களைஇவர்சென்றுசந்தித்துள்ளார் என சரத்வீரசேகர தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுஇராஜதந்திரநெறிமுறையின் ஆணைகளுக்கு அப்பாற்பட்ட மிகவும் அவமானகரமான செயல் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு சர்ச்சைக்குரிய செயல் எனத் தெரிவித்துள்ள சரத்வீரசேகர, கனடா தூதுவரை இலங்கையால் ஏற்றுக்கொள்ள முடியாத நபர் எனஅறிவிக்கவேண்டும்என நான்பரிந்துரைசெய்கின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

(05)

# இறை நோக்கில் காலத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது

## இஸ்லாமிய புதுவருட நிகழ்வில் முப்தி சாஜித் அலி.

இறைவன்தன்னுடைய புனிதநூலானஅல்குர்ஆனில் காலத்துக்கு முன்னுரிமை வழங்கும்விதத்தில்,பல்வேறு இடங்களில் காலத்தின் மீது சத்தியமிட்டுள்ளான். இதனூடாக எங்களை விட்டுச் செல்லும் காலத்தின் அவசியத்தையும் அந்த அந்த நேரங்களில் நாங்கள் கடைபிடிக்கவேண்டியவிடயங்களையும் அல்லாஹ் எங்களுக்கு நேரடியாக வலியுறுத்தியுள்ளதாக முப்தி ஏ.எல்.எம். சாஜித் அலி தெரிவித்தார்.

பிறந்துள்ள இஸ்லாமிய புதுவருடதினமான(முஹர்ரம்) 1445 ஐ வரவேற்று, சம்மாந்துறை அல் ஹம்றா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அல்ஹம்றாவித்தியாலய அதிபர்ஏ..முகம்மட்றிஸ்வான் தலைமையில், பாடசாலை முற்றிலில்; மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய முப்தி சாஜித் அலி -

கொண்டாட வேண்டிய எத்தனையோ விடயங்கள் இருக்கத்தக்கனவாகளங்களில் அநேகர்தேவையற்றவிடயங்களுக்கு முன்னுரிமைவழங்குகின்றோம். இன்று நான் கற்ற இந்த பாடசாலையில் இவ்வாறானதொரு நிகழ்வு நடைபெறுவதையிட்டுமிகவும் பெருமிதம் அடைகிறேன். இதுபோன்றநிகழ்வுகள்எல்லா இடங்களிலும் இடம் பெற வேண்டும். இது ஓர் அரச நிகழ்வாக இடம்பெறுவது இன்னும் பெருமிதமாக உள்ளதுஎன்றும்தெரிவித்தார்.

பாடசாலை மாணவி ஒருவர் இஸ்லாமிய வாழ்வுடன் சம்பந்தப்படுத்தி தாலாட்டு ஒன்றைப் பாடி சபையோரை மகிழ்வித்தார். நிகழ்வின்போது பாடசாலை திட்ட இணைப்பாளர் எம்.வி.எம்.யூசுப், பாடசாலை அபிவிருத்திச்சங்கசெயலாளர் ஏ.எல்.எம். பைரோஜி மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் என பலரும் பங்கு கொண்டனர். (05)

# மன்னார் பஸ் நிலையத்தில் சீர்கேடுகள் அதிகரிப்பு

## அதிகாரிகள் அசமந்தம்

மன்னார் நகர பஸ் நிலையத்தின் மேல் மாடி கட்டடத் தொகுதியில் தொடர்ச்சியாகசமுதாய சீர்கேடுகள் இடம்பெற்று வருகின்ற போதும் உரிய அதிகாரிகள் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை என மன்னார் மாவட்ட பஸ் உரிமையாளர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

இந்தவிடயம்தொடர்பாக பஸ் உரிமையாளர் சங்கத்தினர் மன்னார் நகர சபையின்செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மேற்படி கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்-

மன்னார் நகர பஸ் நிலையத்தின் மேல்மாடி கட்டடத் தொகுதியில் பாடசாலைமாணவர்கள், ஏனையவர்கள் பாலியல் நடவடிக்கைகளிலும், மதுப்பாவனை போன்ற நடவடிக்கைகளிலும்ஈடுபடுகின்றனர்

கடந்த காலத்தில் குறித்த பஸ் நிலையத்தில் கடமைக்காக பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புஉத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டமையால் மேற்படி சம்பவம் இல்லாதுகாணப்பட்டது.

ஆனால் தற்போது பாடசாலைமாணவர்கள், ஏனையவர்கள் அந்த இடத்தில் மிகவும் மோசமாக நடந்து கொள்கின்றனர்.

எனவே, இந்த விடத்தில் உரிய அதிகாரிகள் தலையிட்டு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு சமுதாய சீர்கேட்டை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கடிதத்தின் பிரதிகள் மன்னார் நீதிமன்ற பதிவாளர், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் தள்ளாடி 53 ஆவது படைப் பிரிவு அதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (05)

# நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு முதுகெலும்புள்ளவர்கள் ஆதரிப்பர்

## காவிந்த ஜயவர்த்தன கூறுகிறார்



சுகாதார அமைச்சருக்கு எதிராக கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு முதுகெலும்புள்ள அனைத்து ஆளும் தரப்பு உறுப்பினர்களும் ஆதரவளிக்கவேண்டும்என நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்தஜயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வல, இந்நாட்டுக்குபதிவுசெய்யப்படாத 700 வகையான மருந்துகள் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நாம் உலக சுகாதார ஸ்தாபனத்தில் இலங்கைக்கான அதிகாரிகளை சந்தித்தபோது, இதுதொடர்பாக வினவியிருந்தோம்.

ஆனால், உலகின் எந்தவொரு நாட்டுக்கும் தானமாகவோ, இலவசமாகவோ, பரிசாகவோ மருந்துகள் வழங்கப்படுமானால், அந்நாட்டின் சட்டத்திற்கு இணங்க, அவற்றை பதிவு செய்தே ஆக வேண்டும் என்று தெரிவித்தனர்.

அப்படியானால், சுகாதார அமைச்சர் பொய்யைக் கூறி, இந்த சபையை திசைத்திருப்பியுள்ளார். இப்படியான சுகாதாரஅமைச்சருக்குஎதிராக நாம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளோம்.

இதற்கு முதுகெலும்புள்ள அனைத்து ஆளும் தரப்பு உறுப்பினர்களும் ஆதரவளிக்க வேண்டும்என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மருந்து ஒவ்வாமைக் காரணமாக நாட்டில் எத்தனை உயிர்கள் இல்லாமல் போயுள்ளன. ஆனால், இதுதொடர்பாக எல்லாம் இவர்களுக்கு அக்கறை யில்லை.

இந்த மரணங்கள் தொடர்பாக, ஊடகங்களுக்கு அறிவிக்க வேண்டாம் என்று சுகாதார அமைச்சின் செயலாளரால்கடிதமொன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலைமைதான் மாற வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்'எனஅவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.07.2023இல் வெளியிடப்பெற்றது.